# வணிகவரி மற்றும் பதிவுத் துறை

## மானியக் கோரிக்கை எண். 10

## வணிகவரிகள்

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2022–2023

**பி. மூர்த்தி**
வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2022

# பொருளடக்கம்


| வ எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 1 |
| 2 | துறையின் முக்கிய பணிகள் | 2 |
| 3 | கடந்த ஆறாண்டுகளின் வருவாய் வசூல் | 4 |
| 4 | நிர்வாக செலவினம் | 4 |
| 5 | சரக்குகள் மற்றும் சேவைகள் வரி காலகட்டத்திலான வரி வருவாய் | 5 |
| 6 | துறையின் நிர்வாக அமைப்பு | 6 |
| 7 | வரிவிதிப்புப் பிரிவின் பணிகள் | 10 |
| 7.1 | மறு ஆய்வு, மேல்முறையீடு மற்றும் சீராய்வு பிரிவின் முக்கிய செயல்பாடுகள் | 11 |
| 7.2 | மாநில கணக்காயரால் மேற்கொள்ளப்படும் வருடாந்திர தணிக்கை | 15 |
| 8 | மேல்முறையீட்டுப் பிரிவின் பணிகள் | 17 |
| 8.1 | முந்தைய சட்டங்களின் கீழ் தாக்கல் செய்யப்படும் முதல் மேல்முறையீடு | 17 |

| | | | |
|---|---|---|---|
| | 8.2 | தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017–இன் கீழ் தாக்கல் செய்யப்படும் முதல் மேல்முறையீடு | 19 |
| | 8.3 | தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் முன்பு தாக்கல் செய்யப்படும் மேல்முறையீடுகள் | 21 |
| | 8.4 | சட்டப் பிரிவின் செயல்பாடுகள் | 24 |
| | 8.5 | சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் கீழ் தேசிய தீர்ப்பாயம் உருவாக்குதல் | 26 |
| 9 | | நுண்ணறிவுப் பிரிவின் பணிகள் | 28 |
| | 9.1 | மத்திய நுண்ணறிவு பிரிவின் பணிகள் | 30 |
| | 9.2 | மத்திய நுண்ணறிவு பிரிவால் மேற்கொள்ளப்படும் இதர பணிகளின் விவரங்கள் | 32 |
| | 9.3 | புதிதாக பதிவு பெற்ற வரி செலுத்துவோர் மீது மேற்கொள்ளப்படும் பிந்தைய சரிபார்ப்பு பணி | 34 |
| | 9.4 | போலி பட்டியல் வழங்கும் நடவடிக்கைகளைக் கண்டறிய எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவரங்கள் | 35 |

| | | | |
|---|---|---|---|
| | 9.5 | வேகச்சீட்டு (FASTag) முறையுடன் மின்னணு வழிப் பட்டியினை (e-Way bill) இணைத்தல் | 37 |
| 10 | | புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவின் வெளியீடுகள் | 39 |
| 11 | | வணிகவரி பணியாளர் பயிற்சி நிலையம் 2021-2022-ஆம் ஆண்டில் அளித்துள்ள பயிற்சிகள் | 40 |
| 12 | | வரி செலுத்துவோர் ஆலோசனைக் குழு உருவாக்குதல் | 46 |
| | 12.1 | மாநில அளவிலான வரி செலுத்துவோர் ஆலோசனைக் குழுவின் செயல்பாடுகள் | 46 |
| | 12.2 | மாவட்ட அளவிலான வரி செலுத்துவோர் ஆலோசனைக் குழு | 47 |
| 13 | | புகார் பிரிவின் செயல்பாடுகள் | 47 |
| 14 | | தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017-இன் கீழ் வரிவிதிப்பு | 49 |
| 15 | | சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தின் செயல்பாடுகள் | 52 |
| | 15.1 | சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இழப்பீடு | 58 |

| | | | |
|---|---|---|---|
| | 15.2 | 45வது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள் | 59 |
| | 15.3 | 46வது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள் | 62 |
| 16 | | குறை தீர்க்கும் குழுவின் அமைப்பு | 63 |
| 17 | | மின்னணு வழிப் பட்டி மூலம் சரக்கு போக்குவரத்தினைக் கண்காணித்தல் | 63 |
| 18 | | முன்னதாக தீர்மானிக்கும் அதிகார அமைப்பு (AAR) மற்றும் முன்னதாக தீர்மானிக்கும் மேல்முறையீட்டு அதிகார அமைப்பு (AAAR) | 65 |
| 19 | | சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் கீழ் மிகை இலாபம் ஈட்டுவதை கண்காணிப்பதற்கான மாநில அளவிலான தேர்வுக் குழு | 68 |
| 20 | | பிரத்யேக சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இணையதள முகப்பு உருவாக்குதல் | 70 |
| 21 | | 'எளிதாக தொழில் நடத்துவதை' உறுதி செய்திட மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் | 71 |
| 22 | | வணிகர் நல வாரியத்தின் செயல்பாடுகள் | 73 |

| | | | |
|---|---|---|---|
| | 22.1 | உறுப்பினர் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு | 75 |
| 23 | | சரக்குகள் மற்றும் சேவைகள் வரி காலத்தில் கணினிமயமாக்கல் பணிகள் | 77 |
| | 23.1 | சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இணையதளம் மூலம் புதிய வணிகர்களின் பதிவு விவரங்கள் | 77 |
| | 23.2 | ஜிஎஸ்டி அறிக்கைகள் சமர்ப்பித்தல் விவரங்கள் | 78 |
| | 23.3 | சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இணையதளம் மூலம் வரி வருவாய் | 79 |
| | 23.4 | மென்பொருள் தொகுப்புகள் | 80 |
| | 23.5 | வரி ஏய்ப்பினைக் கண்டுபிடித்திட உருவாக்கப்பட்ட பகுப்பாய்வு மென்பொருள் கருவி | 80 |
| | 23.6 | முழுமையான தீர்வு திட்டத்தின் முன்னேற்றம் | 82 |
| 24 | | வணிகவரி ஆணையர் அலுவலகத்தில் மின் அலுவலக முறையை செயல்படுத்துதல் | 83 |

| | | | |
|---|---|---|---|
| 25 | | தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005–இன் கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் | 84 |
| 26 | | வணிகவரி அலுவலகங்களுக்கு சொந்த கட்டடம் கட்டுதல் | 85 |
| 27 | | 2021–22–ஆம் ஆண்டில் வணிகவரித் துறையில் எடுக்கப்பட்ட புதிய முயற்சிகள் | 86 |
| | 27.1 | வணிகவரித் துறையின் சீரமைப்பு | 86 |
| | 27.2 | வருவாய் மாவட்டங்களுக்கேற்ப வணிகவரி மாவட்டத்தின் எல்லைகளை திருத்தி அமைத்தல் | 87 |
| | 27.3 | சுற்றும் படைகளின் எண்ணிக்கையை 100–ஆக அதிகரித்தல் | 87 |
| | 27.4 | ஜிஎஸ்டி–யின் அனைத்து சேவைகளையும் தமிழில் வழங்குதல் | 88 |
| | 27.5 | ஏழு புதிய நிர்வாக கோட்டங்கள் மற்றும் ஆறு புதிய நுண்ணறிவு கோட்டங்கள் உருவாக்குதல் | 89 |
| | 27.6 | மாநில அளவிலான கட்டுப்பாட்டு அறை மற்றும் புதிய அழைப்பு மையம் அமைத்தல் | 89 |

| | | | |
|---|---|---|---|
| | 27.7 | தமிழ்நாடு மதிப்பு கூட்டு வரிச் சட்டத்தின் கீழ் படிவம் WW தாக்கல் செய்வதற்கான காலக்கெடு நீட்டித்தல் | 90 |
| 28 | | முடிவுரை | 91 |

# வணிகவரி மற்றும் பதிவுத் துறை

# மானியக் கோரிக்கை எண்.10

# வணிகவரிகள்

# கொள்கை விளக்கக் குறிப்பு 2022–2023

## 1. முன்னுரை

வணிகவரித் துறையானது மாநில அரசிற்கு வருவாயைத் திரட்டுவதில் முக்கிய பங்காற்றி வருகிறது. திறன்மிகு வரி நிர்வாகத்திற்காக அதிநவீன தொழில்நுட்பங்கள் பெருமளவில் பயன்படுத்தப்படுவதை இத்துறை உறுதி செய்கிறது.

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017 என்பது பல்வேறு மத்திய மற்றும் மாநில வரிகளை உள்ளடக்கி 01.07.2017 அன்று அறிமுகப்படுத்தப்பட்ட பெருமளவிலானதொரு மறைமுக வரி சீர்திருத்தமாகும். ஒன்றிய மற்றும் மாநில அரசுகள், சரக்கு அல்லது சேவை அல்லது இவ்விரண்டின் வழங்குகை மதிப்பின் மீது ஒருசேர வரி (அதாவது மத்திய சரக்குகள் மற்றும்

சேவைகள் வரி மற்றும் மாநில சரக்குகள் மற்றும் சேவைகள் வரி) விதிப்பதனால் இது ஓர் இரட்டை வரிவிதிப்பு முறையாக உள்ளது. ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரியானது, மாநிலங்களுக்கு இடையேயான வழங்குகை மீதும், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி மீதும் விதிக்கப்படுகிறது.

வரி செலுத்துவோரைத் துன்புறுத்தாமலும் அதே சமயத்தில் வரி வசூலிக்கும் செயல்திறனை உறுதி செய்யும் வகையிலும் வணிகர்களுக்கு இணக்கமான வரிவசூல் கொள்கைகளின் செயலாக்கத்தை இத்துறை பின்பற்றுகிறது.

**2. துறையின் முக்கிய பணிகள்**

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017–ஐ நடைமுறைப்படுத்துவதை வணிகவரித் துறை தனது முக்கிய பணியாகக் கொண்டுள்ளது. இது மட்டுமின்றி, தமிழ்நாடு மதிப்பு கூட்டு வரிச் சட்டம், 2006 மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டம், 1956 [அரசியலமைப்பின் ஏழாம்

அட்டவணையில் மாநில பட்டியலின் வரிசை எண்.54–இல் உள்ளடக்கப்பட்ட கச்சா எண்ணெய், அதிவேக டீசல், மோட்டார் ஸ்பிரிட் (பொதுவாக பெட்ரோல் என்றழைக்கப்படுவது), இயற்கை எரிவாயு, வானூர்திக்கான எரிபொருள் மற்றும் மனித நுகர்வுக்கான மதுபானம் ஆகிய ஆறு பொருட்கள் தொடர்பானவை] ஆகிய சட்டங்களையும் இத்துறை அமல்படுத்துகிறது.

மேலும், 30.06.2017 வரை நடைமுறையில் இருந்த கீழ்காணும் முந்தைய சட்டங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய எஞ்சிய பணிகளையும் இத்துறை கவனிக்கிறது:–

1. தமிழ்நாடு மதிப்பு கூட்டு வரிச் சட்டம், 2006
2. தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், 1959
3. தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டம், 1970
4. தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939
5. தமிழ்நாடு பந்தய வரிச் சட்டம், 1935
6. தமிழ்நாடு ஆடம்பர வரிச் சட்டம், 1981
7. தமிழ்நாடு உள்ளாட்சி பகுதிகளுக்குள் இயக்கூர்திகளின் நுழைவின் மீதான வரிச் சட்டம், 1990

8. தமிழ்நாடு உள்ளாட்சி பகுதிகளுக்குள் சரக்குகள் நுழைவு மீதான வரிச் சட்டம், 2001
9. தமிழ்நாடு விளம்பரங்கள் வரிச் சட்டம், 1983
10. மத்திய விற்பனை வரிச் சட்டம், 1956

## 3. கடந்த ஆறாண்டுகளின் வருவாய் வசூல்

கடந்த ஆறு ஆண்டுகளில் இத்துறையின் வருவாய் வசூல் விவரங்கள் கீழ்கண்டவாறு:–

(ரூபாய் கோடியில்)

| வருடம் | வரி வருவாய் வசூல் |
|---|---|
| 2016–2017 | 67,576.77 |
| 2017–2018 | 73,148.28 |
| 2018–2019 | 87,905.26 |
| 2019–2020 | 95,086.93 |
| 2020–2021 | 96,209.23 |
| 2021–2022 | 1,04,970.06 |

## 4. நிர்வாக செலவினம்

வணிகவரித் துறையின் நிர்வாக செலவினம் கீழே குறிப்பிட்டுள்ளவாறு ஒவ்வொரு ஆண்டும் ஒரு சதவிகிதத்திற்கும் குறைவாகவே இருந்து வருகிறது:–

| ஆண்டு | வருவாய் வரவுகள் (ரூ. கோடியில்) | செலவின தொகை (ரூ. கோடியில்) | வருவாயில் செலவினத்தின் சதவிகிதம் |
|---|---|---|---|
| 2018-19 | 87,905.26 | 386.56 | 0.44 |
| 2019-20 | 95,086.93 | 470.82 | 0.50 |
| 2020-21 | 96,209.23 | 459.39 | 0.48 |
| 2021-22 | 1,04,970.06 | 425.95 | 0.40 |

## 5. சரக்குகள் மற்றும் சேவைகள் வரி கால கட்டத்திலான வரி வருவாய்

2017-18* முதல் 2021-22 வரையிலான சரக்குகள் மற்றும் சேவைகள் வரி வருவாய் விவரங்கள் பின்வருமாறு:-

(ரூபாய் கோடியில்)

| ஆண்டு | சரக்குகள் மற்றும் சேவைகள் வரி அல்லாதவை** | மதிப்பு கூட்டு வரி / மற்றவை | மாநில சரக்குகள் மற்றும் சேவைகள் வரி | சரக்குகள் மற்றும் சேவைகள் வரித் தீர்வு | தற்காலிக ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரித் தீர்வு | இழப்பீடு | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 2017-18 | 28,554.90 | 3,518.80 | 16,199.93 | 7,402.99 | 1,304.00 | 632.00 | 57,612.62 |
| 2018-19 | 42,414.96 | 593.98 | 24,476.56 | 12,425.94 | 4,842.82 | 3,151.00 | 87,905.26 |
| 2019-20 | 44,023.19 | 796.53 | 27,117.38 | 14,031.04 | 196.76 | 8,922.03 | 95,086.93 |
| 2020-21 | 42,982.27 | 393.52 | 23,870.18 | 15,534.18 | 2,826.26 | 10,602.82 | 96,209.23 |
| 2021-22 | 48,401.21 | 416.74 | 29,440.98 | 16,540.01 | 2,935.32 | 7,235.80 | 1,04,970.06 |

* 01.07.2017 முதல் 31.03.2018 வரை

**தமிழ்நாடு மதிப்பு கூட்டு வரிச் சட்டம். 2006, மத்திய விற்பனை வரிச் சட்டம், 1956-இன் கீழ்,

பெட்ரோலிய பொருட்கள் மற்றும் மனித நுகர்வுக்கான மதுபானம் மூலமாக பெறப்படும் (சரக்குகள் மற்றும் சேவைகள் வரி அல்லாத) வருவாயைக் குறிப்பதாகும். பெட்ரோலிய பொருட்களில் பெட்ரோல், டீசல், வானூர்திக்கான எரிபொருள், இயற்கை எரிவாயு, கச்சா எண்ணெய் ஆகியவை அடங்கும்.

## 6. துறையின் நிர்வாக அமைப்பு

வணிகவரி ஆணையர் இத்துறையின் தலைவராக உள்ளார். மூத்த கூடுதல் ஆணையர் ஒருவரும் ஐந்து கூடுதல் ஆணையர்களும் ஓர் இணை ஆணையர் (நிர்வாகம் – இந்திய ஆட்சிப் பணி நிலையில்) மற்றும் பிற அலுவலர்களும் வணிகவரி ஆணையருக்கு உதவி வருகின்றனர்.

வரி செலுத்துவோரால் சமர்ப்பிக்கப்படும் மாதாந்திர மற்றும் ஆண்டறிக்கைகள் தாக்கல் செய்ய வேண்டிய கடைசி தேதியை நீட்டிப்பு செய்தல், சேவை ஏற்றுமதியாளரால் தாக்கல் செய்யப்பட வேண்டிய மாற்றத்தக்க வெளிநாட்டுப் பண விவரங்களை சமர்ப்பிப்பதற்கான கால அவகாசத்தை நீட்டித்தல், வரி ஏய்ப்பில்

ஈடுபடுபவர்களைக் கைது செய்ய ஆணைகள் வழங்குதல், ஒரு குறிப்பிட்ட வகை வரி செலுத்துவோருக்கு ஆண்டறிக்கை சமர்ப்பிப்பதிலிருந்து விலக்களித்தல் போன்ற ஆணைகளைப் பிறப்பிக்க வணிகவரி ஆணையர் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017–இன் கீழ் அதிகாரம் பெற்றுள்ளார். சட்டத்தை செயல்படுத்துவதில் சீரான முறையைப் பின்பற்றவும் சார்நிலை அலுவலர்களுக்கு பணிகளை ஒதுக்கீடு செய்து உரிய வழிகாட்டுதல்களை வழங்கவும் ஆணையருக்கு அதிகாரம் உண்டு.

வணிகவரித் துறை, இணை ஆணையர்கள் தலைமையிலான 12 நிர்வாக கோட்டங்களையும் (அதிகளவு வரி செலுத்துவோர் பிரிவு–LTU உட்பட) 9 நுண்ணறிவு கோட்டங்களையும் உள்ளடக்கியதாக உள்ளது. 2021–22–ஆம் ஆண்டில் புதிதாக 7 நிர்வாக கோட்டங்களும் 6 நுண்ணறிவு கோட்டங்களும்

உருவாக்க அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டு இக்கோட்டங்களை புதிதாக உருவாக்க மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிர்வாகப் பிரிவானது, துணை ஆணையர்கள் தலைமையின் கீழ் 42 சரகங்கள்/வணிகவரி மாவட்டங்களைக் கொண்டுள்ளது. தற்போதைய சரக்குகள் மற்றும் சேவைகள் வரி காலகட்டத்தில் முந்தைய சட்டங்களுக்கான முதல் மேல்முறையீடு மற்றும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டங்களுக்கான முதல் மேல்முறையீடு ஆகியவற்றைக் கொண்ட மேல்முறையீட்டு அமைப்பு தனியாக செயல்படுகிறது. முந்தைய சட்டங்கள் தொடர்பான இரண்டாம் மேல்முறையீட்டு அதிகார அமைப்பான விற்பனை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயம் சென்னையில் தலைமை அமர்வையும் சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் கூடுதல் அமர்வுகளையும் கொண்டுள்ளது.

மாநிலத்திலுள்ள அதிக வரி செலுத்துவோருக்கு வசதியாக தனியானதொரு பிரிவு (Large Taxpayers Unit) சென்னையில் செயல்பட்டு வருகிறது. அதிக அளவில் வரி செலுத்துவோருக்கு திறம்பட சேவைகளை வழங்கிட ஏதுவாக வரி செலுத்துவதில் முதனிலை வகிக்கும் 100 பேர் இப்பிரிவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளனர். அதிக அளவில் வரி செலுத்துவோரிடமிருந்து வசூலிக்கப்பட்ட வருவாய் குறித்த விவரங்கள் பின்வருமாறு:–

| ஆண்டு | வரியின் தன்மை | மாநில வருவாய் (ரூ. கோடியில்) | அதிக அளவில் வரி செலுத்துவோர் பிரிவு வருவாய் (ரூ.கோடியில்) | மாநில வருவாயில் அதிக அளவில் வரி செலுத்துவோர் பிரிவின் பங்களிப்பு சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 2020–21 | சரக்குகள் மற்றும் சேவைகள் வரி அல்லாதவை | 43,375.79 | 39,937.19 | 92% |
| 2021–22 | | 48,817.95 | 44,458.12 | 91% |
| 2020–21 | மாநில சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (மாநில வரம்பிற்குள்ளான வரி செலுத்துவோர் மட்டும்) | 13,446.14 | 2,941.14 | 22% |
| 2021–22 | | 16,709.25 | 3,546.26 | 21% |
| 2020–21 | மொத்தம் | 56,821.93 | 42,878.32 | 75% |
| 2021–22 | | 65,527.20 | 48,004.38 | 73% |

மேம்பட்ட செயல் திறனையும் வரி செலுத்துவோருக்கு உடனுக்குடன் சேவைகள் வழங்குவதையும் உறுதி செய்திடும் நோக்கில் இத்துறையின் நிர்வாக அமைப்பு 01.06.2019 முதல் மறுசீரமைக்கப்பட்டது.

வணிகவரித் துறையானது வரிவிதிப்பு பிரிவு, மேல்முறையீட்டு பிரிவு மற்றும் நுண்ணறிவு பிரிவு ஆகிய மூன்று முக்கிய நிர்வாக பிரிவுகளைக் கொண்டுள்ளது.

## 7. வரிவிதிப்பு பிரிவின் பணிகள்

வரிவிதிப்பு பிரிவில், உதவி ஆணையர்கள்/ வணிகவரி அலுவலர்கள் கட்டுப்பாட்டில் இயங்கும் 338 வரிவிதிப்பு வட்டங்கள் மாநிலம் முழுமையும் பரவியுள்ளன. இவ்வரிவிதிப்பு வட்டங்கள், பதிவுச் சான்று வழங்கல், வரிவிதிப்பு மற்றும் வரி வசூல், தாக்கல் செய்யப்பட வேண்டிய வரி விவர அறிக்கைகளைக் கண்காணித்தல், வரி விவர அறிக்கைகள் மீது கூர்ந்தாய்வு செய்தல், வரிவிதிப்பு/வழக்குத் தீர்ப்பு, இடைமாற்று

கால வரவுகள், வரி நிலுவைகளை வசூல் செய்தல் போன்ற பல்வேறு பணிகளை மேற்கொள்கின்றன. இவ்வரிவிதிப்பு வட்டங்களின் பணிகள் மாவட்ட அளவில் 42 துணை ஆணையர்களாலும் மண்டல அளவில் 11 இணை ஆணையர்களாலும் கண்காணிக்கப்படுகின்றன. உரிய அலுவலர்களால் பிறப்பிக்கப்படும் வரிவிதிப்பு ஆணைகளை சீராய்வு செய்யும் அதிகாரத்தை இணை ஆணையர்கள் பெற்றுள்ளனர்.

### 7.1. மறு ஆய்வு, மேல்முறையீடு மற்றும் சீராய்வு பிரிவின் முக்கிய செயல்பாடுகள்

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017–இன் கீழ் உரிய அலுவலர்களால் பிறப்பிக்கப்படும் ஆணைகள் மற்றும் எடுக்கப்படும் முடிவுகள் சரக/வணிகவரி மாவட்டங்களில் தலைவர்களாக உள்ள துணை ஆணையர்களால் அவர்களின் கீழ் பணியாற்றும்

உதவி ஆணையர்களின் துணையுடன் மறு ஆய்வு செய்யப்படுகின்றன.

மறு ஆய்விற்குப் பின்னர், தேவைப்படும் இனங்களில், சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017–இன்படி அமைக்கப்பட்டுள்ள மேல்முறையீட்டு அமைப்பிடம் துறை சார்பாக மேல்முறையீடு செய்யப்படுகிறது. இம்மேல்முறையீடுகள் ஆறு மாத காலத்திற்குள் செய்யப்பட வேண்டும். அவ்வாறு உரிய காலத்திற்குள் மேல்முறையீடு செய்யப்படாத இனங்களில், கோட்ட இணை ஆணையர்களால் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் 108–வது பிரிவின் கீழ் சீராய்வு மேற்கொள்ளப்படுகிறது.

மேலும், முந்தைய சட்டங்களின் கீழ் வரி செலுத்துவோரால் தாக்கல் செய்யப்பட்ட சீராய்வு மனுக்களும் விசாரிக்கப்பட்டு உரிய சட்டப் பிரிவுகளின் அடிப்படையில் ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

வணிகர்களால் தாக்கல் செய்யப்பட்ட சீராய்வு மனுக்கள் முடிக்கப்பட்ட விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:–

| 2021 வரை ஏற்கப் பட்டவை | 2021–2022–இல் தாக்கல் செய்யப்பட்டவை | மொத்தம் | முடிக்கப் பட்டவை | நிலுவை (31.03.2022 அன்றுள்ளவாறு) |
|---|---|---|---|---|
| 1,524 | 48 | 1,572 | 442 | 1,130 |

நொடிப்பு நிலை மற்றும் நொடிந்தவர் நெறித் தொகுப்பு, 2016 அறிமுகப்படுத்தப்பட்டதனைத் தொடர்ந்து, நொடிப்பு நிலை தீர்மான செயல்முறை அல்லது கலைப்புக்கான தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயத்திற்கு பரிந்துரைக்கப்படும் நிறுவனங்கள் தொடர்பாக தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயத்தின் முன் வணிகவரித் துறையால் தாக்கல் செய்யப்படும் கோரிக்கைகள் கண்காணிக்கப்படுகின்றன. துறையின் கோரிக்கைகள் பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ நிராகரிக்கப்படும் நேர்வுகளில்

அதற்கு எதிராக இடைநிலை விண்ணப்பம் (Interlocutary Application) துறையால் தாக்கல் செய்யப்படுகிறது.

இப்பிரிவில், முந்தைய சட்டங்களின் கீழ் பிறப்பிக்கப்படும் தீர்ப்பாய ஆணைகளின் மீது ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அத்தீர்ப்புகளை ஏற்றுக்கொண்டு பதிவு செய்யப்படுகிறது அல்லது அவற்றின் மீது உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்வது குறித்து முடிவு எடுக்கப்படுகிறது. உயர் நீதிமன்ற ஆணைகளில் சட்டம் குறித்து வினா எழுப்பப்படும் இனங்களில் உச்ச நீதிமன்றத்தில் சிறப்பு விடுப்பு மனுக்கள் (SLP) தாக்கல் செய்யப்படுகின்றன. மாநிலங்களுக்கிடையேயான சரக்கு மாற்றம் (stock transfer) மற்றும் சரக்கு மாற்று விற்பனை (consignment sales) தொடர்பாக தீர்ப்பாயத்தால் வழங்கப்படும் ஆணைகளில் தேவைப்படும் ஒரு சில இனங்கள் மத்திய விற்பனை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயத்திற்கு

கொண்டு செல்லப்பட்டு இப்பிரிவால் கண்காணிக்கப்படுகின்றன.

தீர்ப்பாய ஆணைகளின் மீது எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்த விவரங்கள் பின்வருமாறு:-

| வருடம் | பதிவு செய்யப்பட்டவை | வரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டவை |
|---|---|---|
| 2021-22 | 659 | 17 |

### 7.2. மாநில கணக்காயரால் மேற்கொள்ளப்படும் வருடாந்திர தணிக்கை

தமிழ்நாடு மதிப்பு கூட்டு வரிச் சட்டம், 2006, மத்திய விற்பனை வரிச் சட்டம், 1956 மற்றும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017 ஆகியவற்றின் கீழ் பிறப்பிக்கப்படும் வரிவிதிப்பு ஆணைகள்/முடிவுகள்/வரிவசூல் செயல்பாடுகள் மீது மாநில கணக்காயரால் வருடாந்திர தணிக்கைப் பணி மேற்கொள்ளப்படுகிறது. செயல்திறன் தணிக்கை மட்டுமல்லாது இத்துறையின் பலவித நடவடிக்கைகள் மீதான கருப்பொருள் சார்ந்த தணிக்கையும் மாநில

கணக்காயரால் மேற்கொள்ளப்படுகிறது. ஆய்வு அறிக்கைகள், வரைவு பத்திகள், விளக்கக் குறிப்புகள் மற்றும் பொது கணக்குக் குழு பரிந்துரைகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறிப்புகள் மற்றும் நிலுவையில் உள்ள மாநில கணக்காயர் தணிக்கைப் பத்திகளைக் குறைப்பது தொடர்பாக விவாதிக்க அரசு தலைமைச் செயலாளர் தலைமையில் மாநில அளவிலான தணிக்கை மற்றும் கணக்குக் குழு/உயர்மட்டக் குழுக் கூட்டம் (State level Audit and Accounts Committee/Apex Committee) நடத்தப்படுகிறது. நிலுவையிலுள்ள தணிக்கைப் பத்திகளை குறைக்கும் விதமாக மாநில கணக்காயரால் துறை அதிகாரிகளோடு இணைந்து அவ்வப்போது சிறப்பு அமர்வுகள் நடத்தப்படுகின்றன.

மாநில கணக்காயர் தணிக்கையில் குறிப்பிட்டுள்ள குறைகள் மீதான தீர்வுகள் குறித்த முன்னேற்றம் பின்வருமாறு:–

| | |
|---|---|
| நிலுவையிலுள்ள மாநில கணக்காயரின் தணிக்கை பத்திகளின் எண்ணிக்கை (01.04.2021 அன்றுள்ள ஆரம்ப நிலுவை) | 21,976 |
| 31.03.2022 வரை பெறப்பட்ட மாநில கணக்காயரின் தணிக்கை பத்திகளின் எண்ணிக்கை | 329 |
| 31.03.2022 வரை நிவர்த்தி செய்யப்பட்ட மாநில கணக்காயரின் தணிக்கை பத்திகளின் எண்ணிக்கை | 1,620 |
| நிலுவை | 20,685 |
| கழிக்க: துறையிலேயே மேல் நடவடிக்கை தொடர பி.ஏ.ஜி (தணிக்கை–I)–யிடமிருந்து மாற்றம் செய்யப்பட்ட மாநில கணக்காயரின் தணிக்கை பத்திகளின் எண்ணிக்கை | 2,083 |
| நிகர நிலுவை | 18,602 |

## 8. மேல்முறையீட்டுப் பிரிவின் பணிகள்

### 8.1. முந்தைய சட்டங்களின் கீழ் தாக்கல் செய்யப்படும் முதல் மேல்முறையீடு

தமிழ்நாடு மதிப்பு கூட்டு வரிச் சட்டம் மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழ், உதவி ஆணையர் நிலை வரையிலான வரிவிதிப்பு அலுவலரால் பிறப்பிக்கப்படும்

ஆணைகளுக்கான முதல் மேல்முறையீட்டு அலுவலராக மேல் முறையீட்டு துணை ஆணையர் உள்ளார். துணை ஆணையர்களால் பிறப்பிக்கப்படும் ஆணைகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்படும் மேல்முறையீடுகள், மேல்முறையீட்டு இணை ஆணையரால் விசாரிக்கப்படுகின்றன. மேல்முறையீட்டு துணை ஆணையர்களும் மேல்முறையீட்டு இணை ஆணையரும் தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் கட்டுப்பாட்டின் கீழ் பணியாற்றுகின்றனர். மேல்முறையீட்டு அதிகார அமைப்பில் தாக்கல் செய்யப்படும் மேல்முறையீடுகளில் துறையின் சார்பாக வாதிடுவதற்கு உதவி ஆணையர் நிலையில் துறை பிரதிநிதி ஒருவர் உள்ளார்.

முந்தைய சட்டங்களின் கீழ் முதல் மேல்முறையீட்டு அதிகார அமைப்பில் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடுகளின் விவரங்கள் பின்வருமாறு:–

| 31.03.2021 அன்றுள்ளவாறு நிலுவையிலுள்ள மேல்முறையீடுகளின் எண்ணிக்கை | 2021-22 ஆண்டில் தாக்கல் செய்யப் பட்டவை | மொத்தம் | 2021-22 ஆண்டில் முடித்து வைக்கப்பட்ட மேல்முறையீடுகள் | நிலுவை |
|---|---|---|---|---|
| 4,612 | 1,203 | 5,815 | 2,019 | 3,796 |

## 8.2. தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017-இன் கீழ் தாக்கல் செய்யப்படும் முதல் மேல்முறையீடு

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017-இன் கீழ் மேல்முறையீடுகள் தாக்கல் செய்யப்படும் வரிசையானது, முதல் மேல்முறையீட்டு அதிகார அமைப்பிலிருந்து தொடங்கி, மேல்முறையீட்டு தீர்ப்பாயம், உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றம் என்ற முறையில் அமைந்துள்ளது. சென்னையில் இரண்டு துணை ஆணையர்கள் மற்றும் திருச்சி, மதுரை, ஈரோடு, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் தலா ஒரு துணை ஆணையர் (சரக்குகள் மற்றும் சேவைகள் வரி – மேல்முறையீடு) முதல் மேல்முறையீட்டு அலுவலர்களாக உள்ளனர். இவ்வலுவலர்கள், தங்களது அதிகார எல்லைக்குட்பட்ட

உதவி ஆணையர் மற்றும் அதற்கு கீழான பணி நிலையில் உள்ள வரிவிதிப்பு அலுவலர்களால் பிறப்பிக்கப்படும் ஆணைகளின் மீது தாக்கல் செய்யப்படும் மேல்முறையீடுகளை விசாரிக்கின்றனர். அதிக வரி செலுத்துவோர் பிரிவின் துணை ஆணையர்களால் பிறப்பிக்கப்படும் ஆணைகள்/ முடிவுகளுக்கு எதிரான மேல்முறையீடுகளை விசாரிக்கும் உரிய அதிகாரம் பெற்ற அலுவலராக இணை ஆணையர் (சரக்குகள் மற்றும் சேவைகள் வரி – மேல்முறையீடு) உள்ளார். முதல் மேல்முறையீட்டு அதிகார அமைப்புகளில் உதவி ஆணையர் பணி நிலையில் ஓர் அலுவலர் துறையின் பிரதிநிதியாக செயல்படுகிறார்.

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் கீழ் முதல் மேல்முறையீட்டு அதிகார அமைப்பில் தாக்கல் செய்யப்பட்ட மேல் முறையீடுகளின் விவரங்கள் பின்வருமாறு:–

| 31.03.2021 அன்றுள்ளவாறு நிலுவையிலுள்ள மேல் முறையீடுகளின் எண்ணிக்கை | 2021-22 ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட மேல் முறையீடுகளின் எண்ணிக்கை | மொத்தம் | முடித்து வைக்கப்பட்ட மேல்முறையீடுகள் | நிலுவை |
|---|---|---|---|---|
| 1,119 | 3,984 | 5,103 | 3,327 | 1,776 |

## 8.3. தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் முன்பு தாக்கல் செய்யப்படும் மேல்முறையீடுகள்

தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயமானது, முதல் மேல்முறையீட்டு அலுவலர், அதாவது, மேல்முறையீட்டு துணை ஆணையர் அல்லது இணை ஆணையரால் தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம், 2006 மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டம், 1956-இன் கீழ் பிறப்பிக்கப்படும் ஆணைகள் மீதான மேல்முறையீடுகளை விசாரிக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளது. தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் தலைமை அமர்வு சென்னையிலும் கூடுதல்

அமர்வுகள் சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூரிலும் செயல்படுகின்றன.

மாவட்ட நீதிபதி நிலையில் உள்ள ஒரு நீதிபதி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் தலைமை அமர்வின் தலைவராக உள்ளார். இந்த தீர்ப்பாயத்தில் கூடுதலாக இரண்டு உறுப்பினர்கள் உள்ளனர். ஒருவர், கூடுதல் ஆணையர் நிலைக்குக் குறையாத மாநில அரசின் வணிகவரித் துறையின் அலுவலராகவும் மற்றொருவர், இந்திய தணிக்கை மற்றும் கணக்குகள் பணியில் உள்ள அலுவலர் அல்லது இணை ஆணையர் நிலைக்கு குறையாத வருமான வரித் துறை அலுவலர் அல்லது மத்திய கலால் துறை அலுவலர் அல்லது சுங்கத் துறை அலுவலர் அல்லது இரயில்வே கணக்குகள் துறை அல்லது பாதுகாப்பு கணக்குகள் துறை அலுவலர் அல்லது வெளி நபராக இருக்கும் பட்சத்தில், பட்டய கணக்கராக ஐந்து வருடங்களுக்கு குறைவில்லாத அனுபவமுள்ள இந்திய பட்டய

கணக்கர்கள் நிறுவனத்தின் உறுப்பினர் அல்லது செலவு மற்றும் பணி கணக்காளராக ஐந்து வருடங்களுக்கு குறைவில்லாத அனுபவமுள்ள இந்திய செலவு மற்றும் பணி கணக்காளர்கள் நிறுவனத்தின் உறுப்பினராக இருத்தல் வேண்டும்.

விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் கூடுதல் அமர்வுகள் சார்நிலை நீதிபதி நிலையில் ஒரு நீதித்துறை உறுப்பினரையும் இணை ஆணையர் பணி நிலையில் துறை சார்பாக ஒரு கூடுதல் துறை உறுப்பினரையும் கொண்டுள்ளன. தலைமை அமர்வில் இணை ஆணையர் பணி நிலையில் ஒருவரும் கூடுதல் அமர்வுகள் ஒவ்வொன்றிலும் துணை ஆணையர் பணி நிலையில் ஒருவரும் முறையே துறையின் பிரதிநிதிகளாக செயல்படுகின்றனர்.

விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தில் முடித்து வைக்கப்பட்ட மேல்முறையீடுகளின் விவரங்களாவன:–

| 31.03.2021 அன்றுள்ளவாறு நிலுவையிலுள்ள மேல்முறையீடுகள் | 2021–22 ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடுகள் | மொத்தம் | 2021–22 ஆண்டில் முடித்துவைக்கப்பட்ட மேல்முறையீடுகள் | நிலுவை |
|---|---|---|---|---|
| 6,830 | 1,636 | 8,466 | 1,603 | 6,863 |

## 8.4. சட்டப் பிரிவின் செயல்பாடுகள்

மாண்பமை உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றத்தில் வணிகர்களால் தாக்கல் செய்யப்படும் வரி தொடர்பான நீதிப்பேராணை மனுக்கள், நீதிப்பேராணை மேல்முறையீட்டு மனுக்கள் மற்றும் சிறப்பு விடுப்பு மனுக்கள் தொடர்பாக கண்காணிப்பது சட்டப் பிரிவின் பணியாகும். இப்பிரிவில் முந்தைய வரி தொடர்பான இனங்களில் தாக்கல் செய்யப்படும் நீதிப்பேராணை மனுக்களுக்கான எதிர் வாதுரைகளுக்கு ஒப்புதல் வழங்கப்படுகிறது. மேலும், சரக்குகள் மற்றும் சேவைகள் வரி தொடர்பான நீதிப்பேராணை மனுக்களின் மீது

மத்திய மறைமுக வரி மற்றும் சுங்க வரி வாரியத்துடன் (CBIC) ஒருங்கிணைந்து எதிர் வாதுரைகளுக்கு ஒப்புதல் வழங்கப்படுகிறது. உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றத்தில் ஆஜராகும் சட்ட அலுவலர்களுக்கு வழக்குகளை திறம்பட முடித்தெடுக்கும் வகையில் உரிய அறிவுரைகள் உடனுக்குடன் வழங்கப்படுவதை இப்பிரிவு ஒருங்கிணைத்து கண்காணிக்கிறது. மேலும், சட்ட அலுவலர்களுக்கு வழக்கு கட்டணம் வழங்கப்படுவதை உறுதி செய்வதும் இப்பிரிவின் பணியாகும்.

உயர் நீதிமன்ற மற்றும் உச்ச நீதிமன்றத்தின் ஆணைகள் உரிய முறையில் செயல்படுத்தப்படுவதை இப்பிரிவு கண்காணிக்கிறது. மேலும், மேல்முறையீடு செய்வதற்கு தகுந்த முகாந்திரம் உள்ள வழக்குகளில், உயர் நீதிமன்றம் தொடர்புடைய ஆணைகளின் மீது மேல்முறையீடு/மறு ஆய்வு

மற்றும் சிறப்பு விடுப்பு மனு தாக்கல் செய்ய இப்பிரிவு நடவடிக்கை மேற்கொள்கிறது.

### 8.5. சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் கீழ் தேசிய தீர்ப்பாயம் உருவாக்குதல்

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017–இன் கீழ் தேசிய தீர்ப்பாயம் மற்றும் மண்டல அமர்வு என்ற இரண்டு அமைப்புகளைக் கொண்ட மேல்முறையீட்டு தீர்ப்பாயம் அமைப்பதை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டு தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. சென்னை உயர் நீதிமன்றத்தின் தடையாணையை எதிர்த்து ஒன்றிய அரசால் உச்ச நீதிமன்றத்தில் சிறப்பு விடுப்பு மனு தாக்கல் செய்யப்பட்டு வழக்கு இன்று வரை நிலுவையில் உள்ளது. சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017–இன்படி அமைக்கப்படவுள்ள மேல்முறையீட்டுத் தீர்ப்பாயமானது முதல் மேல்முறையீட்டு அதிகார அமைப்பு, அதாவது மேல்முறையீட்டு துணை

ஆணையர் அல்லது இணை ஆணையர் அல்லது சீராய்வு அதிகாரம் பெற்றவரால் பிறப்பிக்கப்படும் ஆணைகள் தொடர்பான நேர்வுகளில் வழங்குகை இடமானது விவாதத்திற்கு உட்பட்டதாக இருக்கும் நேர்வுகளில் இவை தொடர்பான மேல்முறையீட்டு வழக்குகளை விசாரிக்கும்.

புது தில்லியில் தேசிய அமர்வினையும் சென்னையில் மண்டல அமர்வினையும் கொண்ட தீர்ப்பாயத்தை உருவாக்கிட சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. மேல்முறையீடு அல்லது சீராய்வு அதிகார அமைப்பால் பிறப்பிக்கப்படும் ஆணைகளில் வழங்குகை இடம் குறித்த நேர்வுகள் அல்லாத இனங்களின் மீது தாக்கல் செய்யப்படும் வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தை மாநில அமர்வு பெற்றிருக்கும். அமையவுள்ள மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் மாநில அமர்வானது ஒரு நீதித்துறை உறுப்பினரையும் ஒன்றிய மற்றும் மாநில அரசின்

சார்பில் தலா ஒரு தொழில்நுட்ப உறுப்பினரையும் பெற்றிருக்கும். மாநில அமர்வில் மூத்த நீதித்துறை உறுப்பினர் ஒருவர் அதன் தலைவராக மாநில அரசால் நியமிக்கப்படுவார்.

### 9. நுண்ணறிவு பிரிவின் பணிகள்

கூர்ந்தாய்வு செய்து தயாரிக்கப்பட்ட அறிக்கைகள், தரவுகள் மற்றும் அறிவியல் ரீதியாக சேகரிக்கப்பட்ட தகவல்கள் மூலம் வரி ஏய்ப்பாளர்களைக் கண்டறிவதில் நுண்ணறிவுப் பிரிவு தீவிர கவனம் செலுத்துகிறது. அந்த தகவலின்படி, விற்றுமுதல் தொகை மறைத்தல், தகுதியற்ற உள்ளீட்டு வரிவரவினை துய்த்தல், போலியான உள்ளீட்டு வரிவரவினை தங்களைச் சார்ந்தவர்களுக்குள் கடத்துதல் மற்றும் போலியான உள்ளீட்டு வரிவரவினை துய்த்த பயனாளிகளைக் கண்டறிந்து அவர்களது வணிக தலத்தில் ஆய்வு மேற்கொள்வதன் மூலம் மறைக்கப்பட்ட வரி ஏய்ப்புகளைக் கண்டுபிடித்து வரி வசூலிக்க மேல்நடவடிக்கை

எடுக்கப்படுகிறது. அதே சமயத்தில், சரக்கு வாகனங்கள் மூலம் ஏற்படும் வரி ஏய்ப்பினைத் தடுக்க சுற்றும் படை குழுக்கள் மூலம் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாநிலம் முழுவதும் இணை ஆணையர் தலைமையில் ஒன்பது நுண்ணறிவு கோட்டங்கள் உள்ளன. அவை சென்னையில் நுண்ணறிவு–I, நுண்ணறிவு–II, வேலூர், திருச்சி, மதுரை, சேலம், திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு நுண்ணறிவு கோட்டங்களாகும். நுண்ணறிவு பிரிவில், தரவுக் குழு மற்றும் கணக்கெடுப்புக் குழு ஆகியவை துணை ஆணையர் (புலனாய்வு) அல்லது உதவி ஆணையர் (புலனாய்வு) கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகின்றன. வரி செலுத்துவோர் தொடர்பான தரவு அல்லது விவரங்களை இக்குழுக்கள் சேகரித்து, புலனாய்வு பிரிவுக்கு வழங்கும். இத்தரவுகளின் அடிப்படையில் புலனாய்வு பிரிவு, புலனாய்வு

கோப்புகளைத் தயாரித்து நுண்ணறிவு பிரிவு இணை ஆணையருக்கு சமர்ப்பிக்கும்.

ஒவ்வொரு நுண்ணறிவு கோட்டத்திலும் ஒரு நிலையான சுற்றும் படை உள்ளது. தேவைக்கேற்ப இணை ஆணையர்கள், தங்கள் கோட்டத்திற்கு கூடுதல் சுற்றும் படைகளை உருவாக்கிக்கொள்ள அரசாணையின்படி அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

சுற்றும் படைகளின் செயல்திறன் குறித்த விவரங்கள் பின்வருமாறு:–

| வருடம் | சோதனை செய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை | பதிவு செய்யப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கை | வசூல் செய்யப்பட்ட தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 2020–2021 | 3,09,957 | 3,379 | 11.69 |
| 2021–2022 | 5,39,788 | 10,902 | 73.22 |

9.1. **மத்திய நுண்ணறிவு பிரிவின் பணிகள்**

மத்திய நுண்ணறிவு பிரிவு, ஆணையரின் கட்டுப்பாட்டின் கீழ் கூடுதல் ஆணையர் (நுண்ணறிவு) உதவியுடன் செயல்படுகிறது. இதில் புலனாய்வு பிரிவு மற்றும் ஒருங்கிணைப்பு பிரிவு ஆகிய இரு பிரிவுகள் உள்ளன.

புலனாய்வு பிரிவில், ஆணையரின் அறிவுறுத்தலின்படி சரக்குகள் மற்றும் சேவைகள் தொடர்பான வணிக நிறுவனங்கள் மீது, தரவுக் குழு, கணக்கெடுப்புக் குழு மற்றும் தொழில்நுட்பக் குழுவினரின் உதவியுடன் புலனாய்வு கோப்புகள் தயாரிக்கப்பட்டு, ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன.

மத்திய நுண்ணறிவு பிரிவில் செயல்படும் ஒருங்கிணைப்பு பிரிவு, இணை ஆணையர் நுண்ணறிவு பிரிவிலிருந்து பெறப்பட்ட புலனாய்வுக் கோப்புகளை ஆய்வு செய்து, கூடுதல் ஆணையர் (நுண்ணறிவு) வழியாக ஆணையரின் ஒப்புதலுக்கு அனுப்புகிறது. ஒப்புதல் அளிக்கப்பட்ட புலனாய்வுக் கோப்புகள் தொடர்புடைய இணை ஆணையர்களுக்கு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017–இன் கீழ் ஆய்வு மேற்கொள்வதற்காக அனுப்பி வைக்கப்படுகின்றன. மேலும் அனைத்து நுண்ணறிவு பிரிவு இணை

ஆணையர்களிடமிருந்து பெறப்படும் அறிக்கைகளின் அடிப்படையில் வாராந்திர அறிக்கைகள் அரசுக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன.

**9.2. மத்திய நுண்ணறிவு பிரிவால் மேற்கொள்ளப்படும் இதர பணிகளின் விவரங்கள்**

மத்திய நுண்ணறிவு பிரிவால் தற்போதைய நடைமுறைகளின்படி பெறப்படும் புலனாய்வு கோப்புகள் இப்பிரிவால் ஆய்வு செய்யப்பட்டு வணிகவரி ஆணையரின் ஒப்புதலுக்குப் பின்பு திடீர் ஆய்வுக்காக தொடர்புடைய புலனாய்வு பிரிவுக்கு மாற்றப்படுகின்றன.

வரி செலுத்துவோர் மீது பெயர் குறிப்பிடாத மனு உள்ளிட்ட பல்வேறு ஆதாரங்கள் வழி பெறப்படும் வரி ஏய்ப்பு குறித்த புகார் மனுக்கள் விரிவான ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு, தேவையான இனங்களில் சம்பந்தப்பட்ட பிரிவால் இரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு, தரவுகள் மற்றும் அறிக்கைகளின் அடிப்படையில், சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின்

விதிகளின்படி அம்மனுவின் மீது ஆய்வு மேற்கொள்ளவோ, தணிக்கை மேற்கொள்ளவோ அல்லது உரிய அலுவலரின் தகுந்த மேல்நடவடிக்கைக்காகவோ அனுப்பப்படுகிறது. சரக்குகள் மற்றும் சேவைகள் வரி புலனாய்வுத் துறையின் தலைமை இயக்குனரகம் உள்ளிட்ட மத்திய மற்றும் மாநில அமைப்புகளிடமிருந்து பெறப்படும் தகவல்களின் அடிப்படையிலும், பொதுமக்களிடமிருந்தும் பெறப்படும் மனுக்கள்/புகார்களின் மீது மத்திய நுண்ணறிவு பிரிவு உரிய நடவடிக்கை எடுக்கிறது. 2021–2022–ஆம் ஆண்டில் 1810 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, ரூ.69.77 கோடி வசூலிக்கப்பட்டு, வரிவிதிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மத்திய நுண்ணறிவு பிரிவும் ஜிஎஸ்டி தணிக்கைக்கு சாத்தியமான இனங்களைத் தேர்வு செய்கிறது. சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017–இன் கீழ் வரி திருப்புத் தொகை

கோரிய 924 வரி செலுத்துவோரின் கணக்குகள் மீது சில குறிப்பிட்ட இடர் அளவுகோல்களின் அடிப்படையில் தணிக்கை மேற்கொள்ள வணிகவரி ஆணையரால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இவ்வாறு தேர்வு செய்யப்பட்ட இனங்கள், மத்திய நுண்ணறிவு பிரிவால் சம்மந்தப்பட்ட நிர்வாக கோட்டங்களுக்கு கள தணிக்கை மேற்கொள்வதற்காக அனுப்பப்பட்டன. இவற்றுள், 2021–22–ஆம் ஆண்டில் 790 இனங்களில் தணிக்கை முடிக்கப்பட்டு, ரூ.27.89 கோடி வருவாயாக வசூலிக்கப்பட்டுள்ளது.

**9.3. புதிதாக பதிவு பெற்ற வரி செலுத்துவோர் மீது மேற்கொள்ளப்படும் பிந்தைய சரிபார்ப்பு பணி**

போலி பட்டியல் வணிகர்களை ஆரம்ப கட்டத்திலேயே கண்டறிந்து தடுப்பதற்காக, சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017–இன் கீழ் புதிதாக வழங்கப்பட்ட பதிவுச் சான்றுகள் மீது 01.06.2021 முதல் பிந்தைய சரிபார்ப்பு பணி

மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணியில் அனைத்து வரி செலுத்துவோரின் வியாபார தலங்களும் விடுதலின்றி நேரடியாக துறையின் அலுவலர்கள் மூலம் சரிபார்க்கப்படுகிறது. இதுவரை புதிதாக பதிவு பெற்ற வரி செலுத்துவோரில் 3,147 பேர் தாங்கள் அறிவித்த வியாபார தலங்களில் இல்லையென கண்டறியப்பட்டுள்ளது. இவற்றில் 1,972 இனங்களில் வரி செலுத்துவோரின் பதிவுச் சான்றுகள் இரத்து செய்யப்பட்டு, மீதமுள்ள இனங்களில் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணி ஒவ்வொரு மாதமும் நடைபெறுகிறது.

**9.4.போலி பட்டியல் வழங்கும் நடவடிக்கைகளைக் கண்டறிய எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவரங்கள்**

போலி பட்டியல் வழங்கும் நடவடிக்கைகளைக் கண்டறியும் பொருட்டு வரி செலுத்துவோர் சமர்ப்பிக்கும் அறிக்கைகள் மீது விரிவான ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. மேலும்

மின்னணு வழிப் பட்டி தரவுகளும் சரி பார்க்கப்படுகின்றன. 2021–2022–ஆம் ஆண்டில், 1,044 போலி பட்டியல் வழங்குவோர் கண்டறியப்பட்டு, அவர்கள் மீது சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017–இன் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. போலி உள்ளீட்டு வரிவரவினால் பயனடைந்த வரி செலுத்துவோர் கண்டறியப்பட்டு அவர்கள் தவறாகத் துய்த்த உள்ளீட்டு வரிவரவினை முடக்கும் நடவடிக்கையோடு துய்த்த வரியுடன் அபராதம் மற்றும் வட்டியும் சேர்த்து வசூலிக்கப்படுகிறது. சரக்குகளை வழங்காமல் விலைப் பட்டியல் மட்டுமே வழங்கி வேண்டுமென்றே வரி ஏய்ப்பு செய்பவர்களைக் கைது செய்வது உள்ளிட்ட குற்றவியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதிகாரத்தை தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017 பிரிவு 69(1)–இன்படி வணிகவரி ஆணையர் பெற்றுள்ளார்.

அரசின் வருவாயினைப் பாதுகாக்கும் நோக்கில், 2021–2022–ஆம் ஆண்டில், சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017 பிரிவு 83–இன்படி வணிகவரி ஆணையரால் 16 நிகழ்வுகளில் வரி செலுத்துவோரின் வங்கி கணக்கு/சொத்து ஆகியவை தற்காலிகமாக முடக்கம் செய்யப்பட்டுள்ளது.

**9.5. வேகச்சீட்டு (FASTag) முறையுடன் மின்னணு வழிப் பட்டியினை (e–Way bill) இணைத்தல்**

பெங்களூருவில் உள்ள தேசிய தகவல் மையத்தால் மே மாதம், 2021 முதல் வேகச்சீட்டு (FASTag) முறையுடன் மின்னணு வழிப் பட்டி தேசிய அளவில் ஒருங்கிணைக்கப்பட்டு சரக்குகள் மற்றும் சேவைகள் வரித் துறை அலுவலர்களின் பயன்பாட்டிற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மின்னணு வழிப் பட்டி இணைய முகப்பிலுள்ள ரேடியோ அதிர்வெண் அடையாள தொழில்நுட்ப (RFID) நிகழ் நேர தரவு பகுப்பாய்வைப் பயன்படுத்தி

சந்தேகத்திற்கிடமான 'போலி பட்டியல்' வழங்குவோர் கண்டறியப்படுகின்றனர். இந்த 'போலி பட்டியல்' வழங்குபவர்கள், அவர்களின் மாதாந்திர அறிக்கைகளில் தெரிவித்தபடியும் அவர்கள் தயாரித்த மின்னணு வழிப் பட்டிகளின்படியும் எவ்வித கொள்முதலும் செய்யாது கோடிக்கணக்கான ரூபாய் மதிப்பில் பெருமளவில் வெளிப்புற வழங்கல்களுக்கான மின்னணு வழிப் பட்டிகளைத் தயாரிக்கின்றனர். நிகழ் நேர தரவு பகுப்பாய்வு அறிக்கைகள், உரிய அலுவலர்களின் உடனடி ஆய்விற்கும் பதிவுச் சான்றினை இரத்து செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017–இன் கீழ் உரிய மேல்நடவடிக்கை எடுப்பதற்கும் பயன்படுகின்றன.

பிற மாநிலங்கள்/ஒன்றிய அரசின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள வரி செலுத்துவோரில் ஒரே நிரந்தர கணக்கு எண் (PAN) கொண்டிருந்து,

போலி பட்டியல்களால் பயனடைவோர் இருப்பின், அவர்களது பெயர் விவரங்கள் மற்றும் பதிவுச் சான்றிதழ் விவரங்கள் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017–இன் கீழ் அவர்களது பதிவினை இரத்து செய்வதற்காக உரிய நடவடிக்கை தொடரும் பொருட்டு அந்தந்த மாநிலம்/ஒன்றிய அரசின் உரிய அலுவலர்களுக்கு எச்சரிக்கை அறிவிப்புகளாக அனுப்பப்படுகின்றன.

| வ. எண் | இயக்கத்தின் வகை | தயாரிக்கப்பட்ட மின்னணு வழிப் பட்டிகளின் எண்ணிக்கை (01.04.2021 முதல் 31.03.2022 வரை) |
|---|---|---|
| 1 | மாநிலங்களுக்கிடையேயான இயக்கம் | 2,60,79,161 |
| 2 | மாநிலத்திற்குள்ளான இயக்கம் | 5,02,12,303 |

### 10. புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சி பிரிவின் வெளியீடுகள்

புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சி பிரிவில் பின்வரும் கால முறை அறிக்கைகள்/

வெளியீடுகள் 2021–ஆம் ஆண்டில் உருவாக்கி வெளியிடப்பட்டன:–

1. நிர்வாக கோட்ட அளவிலான மாதாந்திர முன்னேற்ற அறிக்கை
2. நுண்ணறிவு கோட்ட அளவிலான மாதாந்திர முன்னேற்ற அறிக்கை
3. வணிகவரித் துறையின் வருடாந்திர நிர்வாக அறிக்கை
4. வருடாந்திர கால தொடர் பகுப்பாய்வு அறிக்கை – புள்ளி விவரத் தொகுப்பு

**11. வணிகவரி பணியாளர் பயிற்சி நிலையம் 2021–2022–ஆம் ஆண்டில் அளித்துள்ள பயிற்சிகள்**

வணிகவரித் துறையின் அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கு பணியிடைப் பயிற்சி மற்றும் புத்தாக்கப் பயிற்சி அளிக்கும் நோக்கத்தோடு வணிகவரி பணியாளர் பயிற்சி நிலையமானது 1982–ஆம் ஆண்டு முதல் சென்னையில் இயங்கி வருகிறது. இணை ஆணையர் நிலையில் உள்ள ஓர் அலுவலர் இப்பயிற்சி நிலையத்தின் இயக்குநராக உள்ளார். வேலூர், சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை மற்றும்

திருநெல்வேலி ஆகிய இடங்களில் பிராந்திய பயிற்சி நிலையங்கள் உள்ளன.

2021–2022–ஆம் நிதியாண்டில், பயிற்சிக்கான செலவினத் தொகையாக ரூ.71.68 இலட்சம் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டது. கோவிட்–19 பெருந்தொற்று காரணமாக, ஏப்ரல்–2021 முதல் பிப்ரவரி–2022 வரையிலான பயற்சிகள் அரசால் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்கள் மற்றும் நிலையான செயல்பாட்டு நடைமுறைகளைப் பின்பற்றி வழங்கப்பட்டன.

2021–22–ஆம் ஆண்டில் அளிக்கப்பட்ட பயிற்சிகளின் விவரங்கள் கீழ்கண்டவாறு:–

- சுமார் 3000 துறை அலுவலர்கள்/ பணியாளர்களுக்கு பல்வேறு புத்தாக்கப் பயிற்சி, பயிற்சி பட்டறைகள் மற்றும் துறை சார்ந்த பயிற்சி.
- ஏறத்தாழ 1000 அலுவலர்களுக்கு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் மீதான நீதித் துறையின் பார்வை

குறித்தான இரண்டு நாள் இணைய வழி பயிற்சி.

- ஏறத்தாழ 1500 அலுவலர்களுக்கு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் கீழ் திருப்புத் தொகை வழங்குதற்கான சிறந்த நடைமுறைகள் மற்றும் நிலையான செயல்பாட்டு நடைமுறைகள் குறித்த இணைய வழி பயிற்சி.
- ஏறத்தாழ 3000 அலுவலர்களுக்கு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தில் Back Office Modules மற்றும் Faceless Registration Modules சார்ந்த மேம்படுத்தப்பட்ட பயிற்சி.
- ஏறத்தாழ 3000 அலுவலர்களுக்கு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் கீழ் வரிவிதிப்பு நடைமுறைகள் மற்றும் செயல்முறை தொகுதி–1 மற்றும் நடைமுறை செயல்முறை தொகுதி–2 பற்றிய இணைய வழி பயிற்சி.

- சென்னை வணிகவரி கோட்டங்களைச் சார்ந்த உதவி ஆணையர்கள், மாநில வரி அலுவலர்கள் மற்றும் துணை மாநில வரி அலுலர்கள் நிலையிலான சுமார் 500 அலுவலர்களுக்கு மூன்று நாட்கள் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் கீழ் தணிக்கை பயிற்சி.
- 50 உரிய அலுவலர்களுக்கு சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின் கீழ் மறு ஆய்வு, மேல்முறையீடு மற்றும் முந்தைய சட்டங்கள் சார்ந்த ஒரு நாள் பயிற்சி.
- சென்னை கோட்டங்களைச் சார்ந்த சுமார் 700 உதவியாளர் மற்றும் இளநிலை உதவியாளர்களுக்கு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மற்றும் அலுவலக நடைமுறை குறித்தான இரண்டு நாள் புத்தாக்கப் பயிற்சி.
- சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் கீழ் சென்னை கோட்டங்களைச் சார்ந்த நுண்ணறிவு பிரிவில் உள்ள உதவி ஆணையர்கள், மாநில வரி அலுவலர்கள் மற்றும் துணை

மாநில வரி அலுவலர்கள் 150 பேருக்கு இரண்டு நாட்கள் பயிற்சி.

- சென்னை கோட்டங்களைச் சார்ந்த துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள் மற்றும் மாநில வரி அலுவலர்கள் மற்றும் துணை மாநில வரி அலுவலர்களுக்கு திருப்புத் தொகை வழங்குதற்கான நடைமுறைகள் குறித்த ஒரு நாள் பயிற்சி (சென்னையைத் தவிர மற்ற இடங்களில் உள்ள அலுவலர்களுக்கு இணைய வழி மூலம்).
- சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட சமீபத்திய திருத்தங்கள், சுற்றறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் முக்கியமான சட்ட வழக்குகள் பற்றிய இணைய வழி பயிற்சி.
- சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்தல் மற்றும் SAS Alerts அடிப்படையில் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் கீழ் மறு ஆய்வு குறித்தான இணையவழி பயிற்சி.

- சென்னை வணிகவரி கோட்டங்களைச் சார்ந்த துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள், மாநில வரி அலுவலர்கள் மற்றும் துணை மாநில வரி அலுவலர்கள் நிலையில் 70 அலுவலர்களுக்கு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி செயலாக்கம் குறித்தான மூன்று நாட்கள் பயிற்சி.
- SAS அறிக்கைகள் / தாக்கல் செய்யாதவர் மதிப்பீட்டின் அடிப்படையில் அறிவிக்கை பகுப்பாய்வு குறித்தான இணையவழி பயிற்சி.
- தலைமைச் செயலக நிதித்துறை மற்றும் ஓரலகுத் துறைச் சார்ந்த 21 பிரிவு அலுவலர்களுக்கான கணக்கு பயிற்சியும் மாவட்ட தலைமை மற்றும் துறைகளுக்கான கட்டாய பயிற்சியும் 40 தலைமைச் செயலக பிரிவு அலுவலர்களுக்கு வழங்கப்பட்டது.

**2021-2022-ஆம் நிதியாண்டில் பயிற்சிக்காக அனுமதிக்கப்பட்ட நிதி மற்றும் பயிற்சி விவரங்கள்:-**

| ஆண்டு | அனுமதிக்கப் பட்ட நிதி (ரூ.) | பயிற்சிக்காக செலவழிக்கப் பட்ட தொகை (31.03.2022 அன்றைய நாள் வரை) (ரூ.) | நடத்தப்பட்ட பயிற்சிகள் | நடத்தப்பட்ட வகுப்புகள் | பயனடைந்தோர் |
|---|---|---|---|---|---|
| 2021-2022 | 71,68,000 | 51,99,775 | 81 | 662 | 5699 (நேரடி வகுப்பு மூலமாக) மற்றும் 18830 (Webinar Online வகுப்பு மூலமாக) |

## 12. வரி செலுத்துவோர் ஆலோசனைக் குழு உருவாக்குதல்

### 12.1. மாநில அளவிலான வரி செலுத்துவோர் ஆலோசனைக் குழுவின் செயல்பாடுகள்

வணிகவரி ஆணையரின் தலைமையில் மாநில அளவிலான வரி செலுத்துவோர் ஆலோசனைக் குழு ஒன்று செயல்படுகிறது. இக்குழு வணிகர்கள், வணிகர் சங்கங்கள் மற்றும் வர்த்தக சம்மேளனங்களின் குறைகள்/சிரமங்களைக் கேட்டறிகிறது. பெறப்படும் கோரிக்கைகளை ஆராய்ந்து

தொடர்புடையவர்களின் குறைகளைக் களைவதற்கு தேவையான பரிந்துரைகளை இக்குழு அளிக்கிறது.

### 12.2. மாவட்ட அளவிலான வரி செலுத்துவோர் ஆலோசனைக் குழு

மாவட்ட அளவிலான வரி செலுத்துவோர் ஆலோசனைக் குழுவின் தலைவராக மாவட்ட ஆட்சியர் உள்ளார். இக்குழு பல்வேறு வரி செலுத்துவோரின் குறைகளைக் களையும் நோக்கில் செயல்படுகிறது.

### 13. புகார் பிரிவின் செயல்பாடுகள்

துறையில் பிரத்தியேகமாக ஒரு 'புகார் பிரிவு' சென்னை, சேப்பாக்கம், எழிலகத்தில் உள்ள வணிகவரி ஆணையர் அலுவலகத்தில் 01.07.2021 முதல் இயங்குகிறது. இப்புகார் பிரிவு, வணிகவரித் துறை அலுவலர்களால் வழங்கப்படும் சேவைகளில் உள்ள குறைபாடுகள் குறித்த புகார்கள் மட்டுமல்லாது வணிகர்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கைகள் குறித்தும் விசாரித்து நடவடிக்கை

மேற்கொள்கிறது. புகார் பிரிவிற்கென தனியாக 044-28514250 என்ற தொலைபேசி எண் உள்ளது. இதன்வழி அனைத்து வேலை நாட்களிலும் காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணி வரையில் புகார்களைத் தெரிவிக்கலாம் அல்லது 'ctdpetition@ctd.tn.gov.in' என்ற மின்னஞ்சல் முகவரியிலும் குறைகளை அனுப்பலாம்.

புகார் பிரிவில் பெறப்பட்ட குறைகள் பற்றிய விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:-

| விவரங்கள் | மின்னஞ்சலில் பெறப்பட்டவை | தொலைபேசியில் பெறப்பட்டவை |
|---|---|---|
| பெறப்பட்ட புகார்களின் எண்ணிக்கை (31.03.2022 வரை) | 419 | 586 |
| முடித்து வைக்கப்பட்ட புகார்களின் எண்ணிக்கை | 351 | 574 |
| நடவடிக்கையில் உள்ள புகார்களின் எண்ணிக்கை | 68 | 12 |

## 14. தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017–இன் கீழ் வரிவிதிப்பு

தமிழ்நாடு மதிப்பு கூட்டு வரிச் சட்டம், 2006 உள்ளிட்ட முந்தைய சட்டங்களின் கீழ் 30.06.2017 அன்று செயல்பாட்டிலிருந்த பதிவு பெற்ற வணிகர்களை 2017–ஆம் ஆண்டின் தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் புதிய வரிவிதிப்பு முறைக்கு எந்தவித இடையூறுமின்றி மின்னணு முறை மூலம் மாற்றம் செய்திட இத்துறை பல்வேறு விரிவான நடைமுறைகளை மேற்கொண்டது.

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றமானது வரி செலுத்துவோர் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் எளிமையாகவும் எளிதில் பின்பற்றக் கூடியதாகவும் இருக்கும் வகையில் சட்டம் மற்றும் சட்ட விதிகளில் உரிய திருத்தங்களைச் செய்ய பரிந்துரைத்தது. அதனடிப்படையில் தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017 மற்றும் அதைச்

சார்ந்த விதிகளில் உரிய திருத்தங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் கீழ் பல்வேறு சரக்குகள் மற்றும் சேவைகளின் மீதான வரி விகிதம் பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளன:–

- நடைமுறையில் உள்ள நான்கு முக்கிய வரி விகிதங்கள் 5%, 12%, 18% மற்றும் 28% ஆகும்.
- தங்கம், வெள்ளி மற்றும் பிளாட்டினம் போன்ற விலையுயர்ந்த பொருட்களுக்கு 3% வரி விதிக்கப்படுகிறது.
- பட்டை தீட்டப்படாத மற்றும் பட்டை தீட்டப்பட்ட விலையுயர்ந்த கற்களுக்கு விதிக்கப்படும் வரி 0.25% ஆக உள்ளது.
- சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதன் காரணமாக மாநிலங்களுக்கு ஏற்படும் வருவாய் இழப்பினை ஈடுசெய்வதற்காக, ஆடம்பர

பொருட்களான கார்களுக்கும் உடலுக்கு தீங்கு விளைவிக்கின்ற பான்மசாலா, புகையிலை போன்ற பொருட்களுக்கும் பல்வேறு விகிதங்களில் 01.07.2017 முதல் ஐந்தாண்டுகளுக்கு இழப்பீட்டு மேல்வரி விதிக்கப்படுகிறது.

- ஆண்டு விற்றுமுதல் ரூ.1.50 கோடி வரை கொண்ட வணிகர்கள் மற்றும் உற்பத்தியாளர்களுக்கு அவர்களின் விருப்பத்தின் அடிப்படையில் சில நிபந்தனைகளுடன் 1% வரி செலுத்தும் இணக்கவரித் திட்டம் செயல்பாட்டிலுள்ளது.
- வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சரக்குகள் மற்றும் சேவைகள் மற்றும் மாநிலங்களுக்கிடையேயான சரக்குகள் மற்றும் சேவைகளின் வழங்கல்கள் ஆகியவற்றிற்கு ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும்

சேவைகள் வரிச் சட்டம், 2017–இன் கீழ் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிக்கப்படுகிறது.

## 15. சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தின் செயல்பாடுகள்

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றம் அரசியலமைப்பு (101–வது திருத்த) சட்டம், 2016 மூலம் நாடு முழுவதும் ஒரே மாதிரியான சரக்குகள் மற்றும் சேவைகள் வரியினை நடைமுறைப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டதாகும். இம்மன்றம் அனைத்து மாநிலங்கள், சட்டமன்றத்தைக் கொண்டிருக்கும் யூனியன் பிரதேசங்கள் மற்றும் ஒன்றிய அரசினை உறுப்பினர்களாகக் கொண்டுள்ளது. இம்மன்றத்தில் தமிழக அரசின் உறுப்பினராக நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் செயல்படுகிறார்.

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றமானது ஒரு சரக்கு அல்லது சேவையை வரிக்கு உட்படுத்துதல் அல்லது வரியிலிருந்து

விலக்களித்தல், சட்ட முன்வடிவுகளை உருவாக்குதல், வழங்கும் இடத்தை நிர்ணயிக்கும் கொள்கைகளைத் தீர்மானித்தல், வரி விதிக்கக்கூடிய உச்ச வரம்பினை நிர்ணயித்தல், அளவுகளுடன் கூடிய அடிப்படை வரி விகிதங்களை விதித்தல், இயற்கை பேரிடர் காலங்களில் கூடுதல் வருவாயினைப் பெருக்க சிறப்பு வரி விகிதங்கள் நிர்ணயித்தல், சில மாநிலங்களுக்கான சிறப்பு வரைமுறைகள் தொடர்பான பரிந்துரைகளை வழங்குதல் போன்ற பணிகளை மேற்கொள்கிறது.

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றம் இதுவரை 46 கூட்டங்களை நடத்தியுள்ளது. இம்மன்றத்தால் எடுக்கப்பட்டுள்ள சில முக்கியமான முடிவுகள் பின்வருமாறு:–

1. சேவைகள் வழங்கல் தொடர்பான வரிசெலுத்துவோர் பதிவுச் சான்று பெறுவதற்கான உச்சவரம்பு ரூ.20 இலட்சம் என்ற அளவிலேயே தொடரும் நிலையில்,

சரக்குகள் தொடர்பாக பதிவுச் சான்று பெறுவதற்கு ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டிருந்த ரூ.20 இலட்சம் உச்சவரம்பானது 01.04.2019 முதல் ரூ.40 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

2. சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017 பிரிவு 29(2)–இன் உட்பிரிவு (ஆ) அல்லது (இ)–இன் கீழ் பதிவுச் சான்று இரத்து செய்யப்பட்ட இனங்களில் 01.03.2020 முதல் 31.08.2021 வரையிலான காலத்தில் பதிவுச் சான்று மீளப் பெறுவதற்கான விண்ணப்பத்தினைத் தாக்கல் செய்ய வேண்டிய இனங்களில் பதிவுச் சான்று மீளப் பெறுவதற்கான காலக்கெடு வரி செலுத்துவோர் நலன் கருதி 30.09.2021 வரை நீட்டிக்க ஆணை பிறப்பிக்கப்பட்டது.

3. கோவிட் பெருந்தொற்று காலத்தின் போது வரி செலுத்துவோருக்கு

நிவாரணம் வழங்கும் வகையில் வரி விவர அறிக்கைகள் தாக்கல் செய்வதற்கான காலக்கெடு அவ்வப்போது நீட்டிக்கப்பட்டதுடன், தாமதமாக தாக்கல் செய்யும் அறிக்கைகளுக்கு செலுத்த வேண்டிய ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேலான தாமத கட்டணம் சில நிபந்தனைகளுடன் விலக்களிக்கப்பட்டது.

4. முந்தைய நிதி ஆண்டில் ரூ.5 கோடி வரை மொத்த விற்றுமுதல் கொண்ட குறைந்த அளவில் வரி செலுத்துவோர் தங்களது விருப்பத்தின் பேரில் காலாண்டிற்கு ஒரு முறை அறிக்கை தாக்கல் செய்ய வகை செய்யும் மாதாந்திர வரி செலுத்தும் திட்டம் (QRMP Scheme) 01.01.2021 முதல் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், வரி செலுத்துவோர் படிவம் ஜிஎஸ்டிஆர்–3பி–ஐ காலாண்டிற்கு

ஒருமுறை தாக்கல் செய்து மாதாந்திர அடிப்படையில் வரி செலுத்தலாம்.

5. 01.04.2022 முதல் ரூ.20 கோடிக்கு மேல் விற்றுமுதல் கொண்ட வரி செலுத்துவோர், பதிவு பெற்ற வணிகர்களுக்கிடையே தாங்கள் மேற்கொள்ளும் பரிவர்த்தனைகளுக்கான (B2B) விலைப் பட்டியல்களை மின்னணு முறையிலேயே உருவாக்கிட வேண்டும்.

6. 01.04.2021 முதல், ரூ.5 கோடி வரை மொத்த விற்றுமுதல் கொண்ட அனைத்து வரி செலுத்துவோரும் பதிவு பெற்ற வணிகர்களுக்கான வழங்கல்கள் தொடர்பான விலைப் பட்டியல் மற்றும் ஜிஎஸ்டிஆர்–1 அறிக்கைகளில் நான்கு இலக்க இணைக்கப் பெயரிடும் குறியீட்டினை (HSN) குறிப்பிட வேண்டும். ரூ.5 கோடிக்கு மேல் மொத்த விற்றுமுதல் கொண்ட வரி செலுத்துவோரின்

வழங்கல்கள் பதிவு பெற்ற வணிகர்களாக இருந்தாலும் அல்லது பதிவு பெறாத வணிகர்களாக இருந்தாலும் அவ்வழங்கல்களுக்கான விலைப் பட்டியல் மற்றும் ஜிஎஸ்டிஆர்–1 அறிக்கைகளில் ஆறு இலக்கம் கொண்ட இணக்கப் பெயரிடும் குறியீட்டினை (HSN) குறிப்பிட வேண்டும். மேலும் சில குறிப்பிட்ட (notified) சரக்குகளை வழங்கும் வரி செலுத்துவோர், தமது விலைப் பட்டியல்களில் எட்டு இலக்கம் கொண்ட இணக்கப் பெயரிடும் குறியீட்டினை (HSN) குறிப்பிட வேண்டும்.

இணக்கப் பெயரிடும் குறியீட்டு முறை என்பது வணிகம் செய்யப்படும் சரக்குகளை பெயர்கள் மற்றும் எண்கள் மூலம் வகைப்படுத்துவதற்காக சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட முறையாகும். வரி செலுத்துவோர் இத்தகைய (HSN) குறியீட்டினை உபயோகிப்பதால் தங்களது

விலைப் பட்டியல்கள் மற்றும் இதர ஆவணங்களில் சரக்குகளின் விளக்கமான விவரங்களை பதிவேற்றம் செய்ய தேவையில்லை. இதனால் நேரம் விரயமாவது தடுக்கப்படுவதுடன், அறிக்கைகள் தாக்கல் செய்வதும் எளிதாகிறது.

### 15.1. சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இழப்பீடு

இந்திய அரசியல் அமைப்பு (101–வது சட்டத் திருத்தம்) சட்டம், 2016 பிரிவு 18–ஆனது, சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதன் விளைவாக மாநிலங்களுக்கு ஏற்படும் வருவாய் இழப்பை சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தின் பரிந்துரையின் அடிப்படையில் பாராளுமன்றத்தால் உரிய சட்டத்தின் மூலம் ஐந்தாண்டுகளுக்கு இழப்பினை ஈடு செய்து கொள்ள வழிவகை செய்கிறது. இதனடிப்படையில், சரக்குகள் மற்றும் சேவைகள்

வரிச் (மாநிலங்களுக்கான இழப்பீடு) சட்டம், 2017 பாராளுமன்றத்தால் இயற்றப்பட்டது. இதற்காக சில குறிப்பிட்ட சரக்குகள் மற்றும் சேவைகளின் மீது, மத்திய சரக்குகள் மற்றும் சேவைகள் வரி / மாநில சரக்குகள் மற்றும் சேவைகள் வரி / ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரியுடன் சேர்த்து பல்வேறு விகிதங்களில் 'மேல்வரி'யானது மாநிலங்களுக்கு 01.07.2017 முதல் இழப்பீடு வழங்குவதற்காகவே வசூலிக்கப்படுகிறது. இச்சட்டத்தின்படி இழப்பீட்டுத் தொகை வழங்கும் காலம் எதிர் வரும் 30.06.2022 உடன் முடிவடைகிறது. இதனை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டிக்க தமிழ்நாடு அரசால் ஒன்றிய அரசிடம் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

**15.2. 45வது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள்**

17.09.2021 அன்று உத்தர பிரதேச மாநிலத்தின் லக்னோவில் நடைபெற்ற 45வது

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட சரக்குகள் மற்றும் சேவைகள் மீதான வரி விகித மாற்றங்கள் தொடர்பான பரிந்துரைகள் பின்வருமாறு:–

1. கோவிட்–19 சிகிச்சைக்குத் தேவையான சில மருந்துகளின் மீதான வரிச்சலுகைகள் (30.09.2021 வரையிலானது) 31.12.2021 வரை மேலும் நீட்டிக்கப்பட்டது.
2. 01.04.2022 முதல் ரூ.20 இலட்சத்திற்கு மேல் விற்றுமுதலைக் கொண்ட செங்கல் உற்பத்தியாளர்கள் ஒரு சிறப்பு இணக்க வரிவிதிப்பு முறையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளனர். இதன்படி உள்ளீட்டு வரிவரவு துய்க்காத செங்கல் உற்பத்தியாளர்கள் 6% வரியும் உள்ளீட்டு வரிவரவைத் துய்க்கும் செங்கல் உற்பத்தியாளர்கள் 12% வரியும் செலுத்த வேண்டும்.

3. 01.10.2021 முதல் பின்வரும் சரக்குகள் மீதான வரி குறைக்கப்பட்டுள்ளது:–

| வ. எண் | சரக்குகளின் விவரம் | முந்தைய வரி விகிதம் | தற்போதைய வரி விகிதம் |
|---|---|---|---|
| 1 | ஊனமுற்றோர் பயன்படுத்தும் வாகனங்களுக்கான ரெட்ரோ ஃபிட்மென்ட் கிட் | உரிய வரி விகிதம் | 5% |
| 2 | ஐ.சி.டி.எஸ் போன்ற திட்டங்களுக்காக வழங்கப்படும் செறிவூட்டப்பட்ட அரிசி குறுவைகள் | 18% | 5% |
| 3 | புற்றுநோய் சிகிச்சைக்கான கெய்ட்ரூடா மருந்து | 12% | 5% |
| 4 | டீசலுடன் கலப்பதற்காக எண்ணெய் நிறுவனங்களுக்கு வழங்கப்படும் பயோ டீசல் | 12% | 5% |

4. கீழ்கண்ட சேவைகளை அளித்திடும் மின்னணு வணிக செயல்பாட்டாளர்கள் 01.01.2022 முதல் வரியினை தாமாகவே செலுத்திட கடமைப்பட்டுள்ளனர்:–

அ) எந்த விதமான மோட்டார் வாகனங்களின் மூலமாகவும்

பயணிகளுக்கான போக்குவரத்து அளித்தல்;

ஆ) உணவக சேவைகள் (சில விலக்குகளுடன்).

**15.3. 46வது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள்**

46வது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றக் கூட்டம் 31.12.2021 அன்று புது தில்லியில் ஜவுளிகள் மீதான வரி உயர்வு தொடர்பான ஒரே பொருளை மட்டுமே நிகழ்ச்சி நிரலாகக் கொண்டு நடைபெற்றது.

ஏற்கனவே 45வது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றக் கூட்டத்தில் ஜவுளிகள் துறையில் உள்ள தலைகீழ் வரி அமைப்பு முறையினை சரி செய்வதற்காக ஜவுளிகள் மீதான வரி விகிதத்தினை 5 சதவிகிதத்திலிருந்து 12 சதவிகிதமாக உயர்த்திட எடுக்கப்பட்ட பரிந்துரையினை ஒத்திவைக்க இம்மன்றத்தின் 46வது கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

## 16. குறை தீர்க்கும் குழுவின் அமைப்பு

வர்த்தக மற்றும் தொழில் துறை சார்ந்த பிரதிநிதிகளையும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்துடன் தொடர்புடையவர்களையும் கொண்டு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சம்பந்தமான குறைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு மாநில அளவிலான குறை தீர்க்கும் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு மாநில வணிகவரி ஆணையர் மற்றும் மத்திய வரி முதன்மை தலைமை ஆணையர் ஆகியோரை சக தலைவர்களாகக் கொண்டுள்ளது. இக்குழு குறை தீர்க்கும் கூட்டங்களை உரிய கால இடைவெளியில் நடத்தி வருகிறது.

## 17. மின்னணு வழிப் பட்டி மூலம் சரக்கு போக்குவரத்தினைக் கண்காணித்தல்

நாடு முழுவதும் சரக்கு போக்குவரத்தினைக் கண்காணித்திட, சரக்குகள் மற்றும் சேவைகள் வரி வலைதள அமைப்பானது தேசிய தகவல்

மையத்துடன் இணைந்து மின்னணு வழிப் பட்டி முறையை உருவாக்கியுள்ளது. இம்முறையானது, மாநிலங்களுக்கிடையேயான சரக்கு போக்குவரத்திற்காக 01.04.2018 அன்று அறிமுகப்படுத்தப்பட்டு, பின்னர் மாநிலத்திற்குள்ளேயான சரக்கு போக்குவரத்திற்கும் விரிவாக்கப்பட்டது. 24X7 அடிப்படையில் செயல்படும் மின்னணு வழிப் பட்டி முறையானது உள்ளீட்டு வரிவரவுடன் இயைந்து சரக்கு போக்குவரத்து நிகழ்கிறதா என்பதைக் கண்காணிக்கவும் உதவுகிறது.

அதிக அளவில் மின்னணு வழிப் பட்டி தயாரிப்பதில் நாட்டிலேயே தமிழ்நாடு நான்காவது மாநிலமாக உள்ளது. இம்மின்னணு முறை வலைதளமானது, பல்வேறு நிர்வாக தகவல்கள் மற்றும் பகுப்பாய்வு அறிக்கைகள் பெற ஏதுவாக வடிவமைக்கப்பட்டுள்ளதால், இதன் மூலம் வரி ஏய்ப்பு நிகழ்வுகளைக் கண்டறிய முடிகிறது.

31.03.2022 வரை இம்மின்னணு வழிப் பட்டி வலைதளத்தின் மூலம் 3.95 இலட்சம் வரி செலுத்துவோர் பதிவு செய்துள்ளனர். மாநிலங்களுக்கிடையே 8.69 கோடி மின்னணு வழிப் பட்டிகளும் மாநிலத்திற்குள்ளே 15.73 கோடி மின்னணு வழிப் பட்டிகளும் இவ்வலைதளம் மூலம் உருவாக்கப்பட்டுள்ளன.

## 18. முன்னதாக தீர்மானிக்கும் அதிகார அமைப்பு (AAR) மற்றும் முன்னதாக தீர்மானிக்கும் மேல்முறையீட்டு அதிகார அமைப்பு (AAAR)

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் கீழ் பதிவு பெற்ற நபர் அல்லது பதிவு பெற உத்தேசித்துள்ள நபர், சரக்குகள் அல்லது சேவைகள் அல்லது இவை இரண்டிற்குமான வகைப்படுத்துதல், அறிவிக்கைகளின் பொருந்தும் தன்மை, வழங்கல்கள் தொடர்பான நேரம் மற்றும் மதிப்பு நிர்ணயம் செய்தல், வழங்கல் குறித்த ஏற்பு, உள்ளீட்டு வரிவரவு மீதான ஏற்பு மற்றும் வரி செலுத்த வேண்டிய பொறுப்பு ஆகிய

இனங்களின் மீதான விளக்கத்திற்காக முன்னதாக தீர்மானிக்கும் அதிகார அமைப்பினை அணுகலாம். ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலக வளாகம், யானைக்கவுனி பாலம் சாலை, பூங்கா நகர், சென்னை–600 003 என்ற முகவரியில் தமிழகத்திற்கான முன்னதாக தீர்மானிக்கும் அதிகார அமைப்பு செயல்பட்டு வருகிறது. இதன் மின்னஞ்சல் முகவரி 'jc.adv.rul@ctd.tn.gov.in' ஆகும்.

முன்னதாக தீர்மானிக்கும் அதிகார அமைப்பினால் 2021–22–ஆம் ஆண்டில் முடிக்கப்பட்ட விண்ணப்பங்களின் விவரங்கள் பின்வருமாறு:–

| ஆண்டு | முடிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 2021–2022 | 53 |

முன்னதாக தீர்மானிக்கும் அதிகார அமைப்பினால் வழங்கப்பட்ட ஆணை விண்ணப்பதாரருக்கு திருப்தி அளிக்கவில்லை

எனில், ஆணை பெறப்பட்ட 30 நாட்களுக்குள் முன்னதாக தீர்மானிக்கும் அதிகார அமைப்பின் மேல்முறையீட்டு அமைப்பிடம் அவர் மேல்முறையீடு செய்யலாம். மாநில வணிகவரி ஆணையரும் தமிழ்நாட்டிற்கான மத்திய வரி முதன்மை தலைமை ஆணையரும் இவ்வமைப்பின் உறுப்பினர்களாவர். இவ்வமைப்பு எழிலகம், சேப்பாக்கம், சென்னை – 600 005 என்ற முகவரியில் செயல்படுகிறது. இதன் தொலைபேசி எண் 044–28521744 மற்றும் மின்னஞ்சல் முகவரி 'cct@ctd.tn.gov.in' ஆகும்.

முன்னதாக தீர்மானிக்கும் மேல்முறையீட்டு அதிகார அமைப்பினால் 2021–2022–ஆம் ஆண்டில் முடிக்கப்பட்ட மேல்முறையீடுகளின் விவரங்கள் பின்வருமாறு:–

| **ஆண்டு** | முடிக்கப்பட்ட மேல்முறையீடுகளின் எண்ணிக்கை |
|---|---|
| 2021–2022 | 18 |

## 19. சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் கீழ் மிகை இலாபம் ஈட்டுவதை கண்காணிப்பதற்கான மாநில அளவிலான தேர்வுக் குழு

சரக்குகள் மற்றும் சேவைகள் வழங்குவோர், வரி விகிதத்தில் ஏதேனும் குறைப்பு அல்லது உள்ளீட்டு வரிவரவின் பலனைத் துய்த்தல் ஆகிய நிகழ்வுகளில் அதற்கேற்றவாறு சரக்குகள் மற்றும் சேவைகள் மீது உரிய விலை குறைப்பு செய்ய வேண்டும். இந்நன்மைகளை மேற்கூறியவாறு பயனாளிகளுக்கு வழங்காவிடில் அது 'மிகை இலாபம்' ஈட்ட வழி வகுக்கிறது. இதனைத் தவிர்க்கவும் கண்காணிக்கவும் தேசிய அளவில் ஓர் அதிகார அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான நிகழ்வுகளைக் கண்டறிய தேசிய மிகை இலாப தடுப்பு ஆணையத்தால் தமிழ்நாட்டில் மிகை இலாப தடுப்பிற்கான மாநில தேர்வுக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இம்மாநில தேர்வுக் குழுவில் இணை ஆணையர்

(நுண்ணறிவு–I), சென்னை மற்றும் மத்திய வரி ஆணையர், சென்னை (வடக்கு) ஆணையரகம் (மத்திய வரி) ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர். இக்குழு கிரீம்ஸ் சாலை, சென்னை–600 006–இல் அமைந்துள்ள இணை ஆணையர், (நுண்ணறிவு–I) அலுவலகத்தில் செயல்படுகிறது. இவ்வலுவலக மின்னஞ்சல் முகவரி 'jcint.chn1@ctd.tn.gov.in' ஆகும்.

தேர்வுக் குழுவால் 31.03.2022 வரை பெறப்பட்ட விண்ணப்பங்களின் விவரங்கள் கீழ்கண்டவாறு:–

| வருடம் | பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | இறுதி செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2017–18 | 3 | 3 |
| 2018–19 | 7 | 7 |
| 2019–20 | 9 | 9 |
| 2020–21 | 3 | 2 |
| 2021–22 | 0 | 0 |
| மொத்தம் | 22 | 21 |

## 20. பிரத்தியேக சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இணையதள முகப்பு உருவாக்குதல்

'www.gst.gov.in' என்ற இணையதளமானது, நாடு முழுவதுமுள்ள வரி செலுத்துவோருக்கான பொது இணையதள முகப்பாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இணையத்தால் (GSTN) உருவாக்கப்பட்டு பராமரிக்கப்படுகிறது. வரி செலுத்துவோர், இந்த இணையதள முகப்பின் மூலமே புதிய பதிவுச் சான்று, திருத்தம், அறிக்கைகள் தாக்கல் செய்தல், திருப்புத் தொகை விண்ணப்பங்கள் தொடர்பான பணிகளை மேற்கொள்கின்றனர். மேலும், வரி செலுத்துவோர் மற்றும் வரி அலுவலர்களுக்கிடையேயான ஒற்றைத் தொடர்பு முறையாகவும் இது செயல்படுகிறது.

வரி செலுத்துவோர் நலனுக்காக அனைத்து அறிவிப்புகளும் ஆணைகளும் இந்த இணையதள முகப்பின் மூலமே வழங்கப்படுகின்றன. சரக்குகள் மற்றும்

சேவைகள் வரி இணையம் (GSTN) மூலம் 1800103478‌6 என்ற கட்டணமில்லா எண்ணுடன் உதவி மையம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இந்த உதவி மையம் தமிழ் உள்ளிட்ட 12 மொழிகளில் சேவைகளை வழங்குகிறது.

**21. 'எளிதாக தொழில் நடத்துவதை' உறுதி செய்திட மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள்**

புதிய முதலீடுகளை ஈர்த்தல், வேலை வாய்ப்புகளை அதிகரித்தல் மற்றும் வணிகத்திற்கு இணக்கமான சூழலை உருவாக்குதல் போன்ற பல்வேறு முயற்சிகளின் மூலம் மாநிலத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்திட அரசு உறுதி பூண்டுள்ளது. மேற்கூறிய இலக்குகளை அடைய வணிகவரித் துறை கீழ்காணும் சேவைகளை வழங்கி வருகிறது:–

1. வரி செலுத்துவோர் நலன் கருதி பதிவுச்சான்று வழங்கல், அறிக்கைகள் தாக்கல் செய்தல், வரி செலுத்துதல்,

திருப்புத் தொகை வழங்கல் போன்ற வணிகவரித் துறையின் அனைத்து பணிகளும் இணைய வழியாகவே மேற்கொள்ளப்படுகின்றன.

2. பதிவுச் சான்று புதுப்பித்தலை நீக்குதல், தாக்கல் செய்யப்பட வேண்டிய அறிக்கைகளைக் குறைத்தல், பல்வேறு பதிவேடுகளை நீக்குதல் போன்ற பல சீர்திருத்த நடவடிக்கைகளையும் இத்துறை செயல்படுத்தியுள்ளது.

3. மதிப்பு கூட்டு வரி தொடர்பான இணையதள சேவைகளை இந்திய அரசால் உருவாக்கப்பட்டுள்ள 'இ–பிஸ்' (e–biz) இணையதள முகப்பு மூலமாகவும் வழங்க இத்துறை திட்டமிட்டுள்ளது.

4. மாநில சட்ட ஆணையத்தின் பரிந்துரைகளின்படி, வணிகவரித் துறை தொடர்பான காலாவதியான சட்டங்களை

நீக்குவது குறித்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 22. வணிகர் நல வாரியத்தின் செயல்பாடுகள்

மாண்புமிகு தமிழக முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் சட்டசபையில் வெளியிடப்பட்ட அறிவிப்பினைத் தொடர்ந்து 1989–ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட தமிழ்நாடு வணிகர்கள் நல வாரியமானது, பதிவு செய்து கொண்டுள்ள வாரிய உறுப்பினர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி வருகிறது. இவ்வாரியம் ரூ.10 கோடியை தொகுப்பு நிதியாகக் கொண்டுள்ளது. தொடங்கப்பட்ட நாள் முதல் 31.03.2022 வரை தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 84,101 ஆகும்.

இவ்வாரியத்தின் உறுப்பினர்களுக்கு பின்வரும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன:–

| வரிசை எண் | உதவிகளின் வகை | தொகை (ரூபாய்) |
|---|---|---|
| 1 | குடும்ப நல உதவி | 1,00,000 |
| 2 | மருத்துவ உதவி<br>இதய பைபாஸ் அறுவை சிகிச்சை, சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை மற்றும் புற்றுநோய் அறுவை சிகிச்சை<br>டயாலிஸிஸ், கீமோதெரபி, கதிர்வீச்சு சிகிச்சை மற்றும் ஆன்ஜியோபிளாஸ்டி போன்ற மருத்துவ சிகிச்சைமுறைகள்<br>கருப்பை அகற்றும் அறுவை சிகிச்சை | i) 50,000<br>ii) 15,000<br>iii) 20,000 |
| 3 | கல்வி உதவி<br>இளங்கலை பட்டம்<br>முதுகலை பட்டம் | i) 5,000<br>ii) 10,000 |
| 4 | விளையாட்டு வீரர்களுக்கான உதவி<br>சர்வதேச அளவு<br>தேசிய அளவு<br>மாநில அளவு<br>மாவட்ட அளவு | i) 25,000<br>ii) 10,000<br>iii) 5,000<br>iv) 3,000 |
| 5 | தீ விபத்திற்கான நிவாரண உதவி | 5,000 |
| 6 | சிறு கடைகள் (bunks) அமைப்பதற்கான உதவி | 10,000 |

2021-2022-ஆம் ஆண்டில் இரண்டு புதிய திட்டங்கள் இவ்வாரிய உறுப்பினர்களின் நலனுக்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றின் கீழ் திருமண உதவியாக ரூ.10,000 மற்றும் விபத்து நிவாரண உதவியாக ரூ.25,000 வழங்கப்படுகிறது.

இந்த நலத்திட்டங்களின் வாயிலாக 31.03.2022 வரை ரூ.3.08 கோடி மதிப்பீட்டில் 8,875 உறுப்பினர்கள் பயனடைந்துள்ளனர்.

தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தில் இணைய வழியாகவே உறுப்பினராகப் பதிவு செய்து கொள்ளும் வசதி வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சரால் 16.06.2021 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

### 22.1. உறுப்பினர் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு

புதிய உறுப்பினர்களை இவ்வாரியத்தில் சேர்க்கவும் கோவிட்-19 பேரிடர் காலங்களில் சிறு, குறு வணிகர்களுக்கு உதவி செய்யும் வகையிலும்

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தில் பதிவு பெற்று விற்றுமுதல் அளவு ரூ.40 இலட்சத்திற்கு உட்பட்ட சிறு வணிகர்கள் மற்றும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் கீழ் பதிவு பெறாத குறு வணிகர்களை இவ்வாரியத்தில் உறுப்பினர்களாக சேர்க்க அதற்கான கட்டணத் தொகை ரூ.500/-ஐ செலுத்துவதிலிருந்து 15.07.2021 முதல் 14.10.2021 வரையிலான மூன்று மாத காலங்களுக்கு விலக்களிக்கப்பட்டது.

மேலும், பல்வேறு வணிக பேரமைப்புகளின் கோரிக்கைகளை ஏற்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இச்சலுகை 31.03.2022 வரை கால நீட்டிப்பு செய்து உத்தரவிடப்பட்டது.

அரசால் எடுக்கப்பட்ட இச்சிறப்பு முயற்சியின் பயனாக 36,952 வணிகர்கள் புதிதாக தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தில் உறுப்பினர்களாக பதிவு செய்துள்ளனர்.

## 23. சரக்குகள் மற்றும் சேவைகள் வரி காலத்தில் கணினிமயமாக்கல் பணிகள்

### 23.1. சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இணையதளம் மூலம் புதிய வணிகர்களின் பதிவு விவரங்கள்

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி அமல்படுத்தப்பட்ட பிறகு ஜிஎஸ்டி இணையதளம் மூலம் மட்டுமே புதிய வரி செலுத்துவோரின் பதிவு நடைபெறுகிறது. வரி செலுத்துவோர் தங்களின் பதிவு எண்ணைப் பெற நேரில் செல்லாமல் இணைய வழியிலேயே விண்ணப்பிக்கலாம். இந்த வசதி மூலம், சுமார் 3.21 இலட்சம் மாநில அதிகார வரம்பிலுள்ள வரி செலுத்துவோர் பதிவு செய்து கொண்டு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி குறியீட்டு (GSTIN) எண்ணைப் பெற்றுள்ளனர். ஏறத்தாழ 11 இலட்சம் வரி செலுத்துவோரில், 6.72 இலட்சம் வரி செலுத்துவோர் மாநில அதிகார வரம்பிலும் 4.28 இலட்சம் வரி செலுத்துவோர் மத்திய அதிகார வரம்பிலும் ஒதுக்கீடு பெற்று ஜிஎஸ்டி

மின்னணு சேவைகளைப் பயன்படுத்தி வருகின்றனர்.

### 23.2. ஜிஎஸ்டி அறிக்கைகள் சமர்ப்பித்தல் விவரங்கள்

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி அறிக்கைகள் அனைத்தும் ஜிஎஸ்டி இணையதளத்தில் சமர்ப்பிக்கப்படுகின்றன. அவையனைத்தும் ஏ.பி.ஐ மென்பொருள் (API) மூலம் வணிகவரித் துறையின் பின்புல தளத்திற்கு (Back office) கொண்டு செல்லப்படுகின்றன. சராசரியாக 5.34 இலட்சம் வரி செலுத்துவோர் தங்களது மாதாந்திர GSTR–3B அறிக்கைகளை உரிய வரியுடன் சமர்ப்பிக்கின்றனர். சுமார் 60,000 வரி செலுத்துவோர் காலாண்டிற்கு ஒரு முறை அறிக்கை தாக்கல் செய்து மாதாந்திர வரி செலுத்தும் திட்டத்தை (QRMP) தேர்ந்தெடுத்து, ஒவ்வொரு காலாண்டிலும் GSTR–3B அறிக்கைகளை தாக்கல் செய்து வருகிறார்கள்.

## 23.3. சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இணையதளம் மூலம் வரி வருவாய்

வரி செலுத்துவோரின் வசதிக்காக 'https://ctd.tn.gov.in' என்ற இணையதளம் உருவாக்கப்பட்டு வணிகவரித் துறையினால் பராமரிக்கப்படுகிறது. இந்த இணையதளம் மூலம் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி அமைப்பின் வரம்பிற்குள் வராத பொருள்களுக்கான மாதாந்திர அறிக்கைகளும் அதற்கான வரி செலுத்துகையும் மேற்கொள்ளப்படுகிறது. மாதந்தோறும் சராசரியாக ரூ.3,900 கோடி வரி வருவாய் (மதிப்பு கூட்டு வரி அல்லாதவை) இந்த இணையதளம் மூலம் பெறப்படுகிறது.

மேலும் சராசரியாக ரூ.2,300 கோடி மாநில சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (SGST), சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இணையதளம் மூலம் பெறப்படுகிறது. இது தவிரவும் மாதந்தோறும் சராசரியாக ரூ.1,200 கோடி ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (IGST) வருவாயாக பெறப்படுகிறது.

### 23.4. மென்பொருள் தொகுப்புகள்

பின்புல தளத்தில் (Back office portal) துறையின் அலுவலர்களின் பயன்பாட்டிற்கென வரி செலுத்துவோரின் பதிவு, அறிவிக்கைகள், வரிசெலுத்துதல், வரிதிருப்புகை, மேல்முறையீடு ஆகிய மென்பொருள் தொகுப்புகள் உள்ளன. 2021–2022–ஆம் ஆண்டில், வரிவிதிப்பு மற்றும் நுண்ணறிவு சார்ந்த புதிய மென்பொருள் தொகுப்புகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. திருப்புத் தொகையை வரி செலுத்துவோரின் வங்கி கணக்கிற்கு நேரடியாக வரவு வைக்கும் வகையில் இணைய வழி மூலமாக ஒற்றை முறை திருப்புத் தொகை வழங்கும் வசதியும் பின்புல தளத்தில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

### 23.5. வரி ஏய்ப்பினைக் கண்டுபிடித்திட உருவாக்கப்பட்ட பகுப்பாய்வு மென்பொருள் கருவி

வரி ஏய்ப்புகளைக் கண்டுபிடிப்பதற்காக ஒரு பகுப்பாய்வு மென்பொருள் கருவி துறையால் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் உதவியுடன்

உருவாக்கப்பட்டுள்ள பகுப்பாய்வு அறிக்கைகள் வரி ஏய்ப்புகளைக் கண்டறிய வரி அலுவலர்களுக்கு மிகவும் உறுதுணையாக உள்ளன. சமீப காலங்களில் வரி செலுத்துவோரின் எண்ணிக்கையும் பரிவர்த்தனை தரவுகளும் அதிகரித்துள்ளதால் வரி ஏய்ப்புகளைக் கண்டறிய உதவும் SAS வரி ஏய்ப்பு கண்டுபிடிப்பு பகுப்பாய்வு மென்பொருள் கருவி மேம்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம், துறை அலுவலர்கள் அதிகமான வரி ஏய்ப்புகளைக் கண்டுபிடிக்க இயலும்.

2021–22–ஆம் ஆண்டில், ரூ.4.04 கோடி செலவில் SAS உரிமம் புதுப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் இதன் உதவியோடு பல புதிய பகுப்பாய்வு செயலிகள் உருவாக்கப்பட்டுள்ளன. அறிக்கைகள் மற்றும் மின்னணு வழிப்பட்டிகளில் பொருந்தா இனங்களைக் கண்டறிந்து அதன் மூலம் அரசின் வருவாயைப் பெருக்க உரிய அலுவலர்களுக்கு

இச்செயலிகள் உதவுகின்றன. பகுப்பாய்வு கருவி பின்புல இணையதளத்தோடு ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதால், அதிக வரி ஏய்ப்பு இனங்கள் கண்டறியப்பட்டு அவை உரிய அலுவலர்களின் முகப்புத் திரையில் மேல்நடவடிக்கை எடுப்பதற்காக காட்சிப்படுத்தப்படுகின்றன.

## 23.6. முழுமையான தீர்வு திட்டத்தின் முன்னேற்றம்

முழுமையான தீர்வு திட்டத்திற்கான ஒருங்கிணைப்பாளருடனான நீட்டிக்கப்பட்ட ஒப்பந்த காலம் 2022 சனவரி மாதத்துடன் முடிவடைந்துவிட்ட நிலையில், மாநில உயரதிகார குழு எடுத்த முடிவின் அடிப்படையில் அவ்வொப்பந்தம் சனவரி 2023 வரை மேலும் ஓராண்டிற்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

கள அலுவலகங்களின் பயன்பாட்டிற்கென முழுமையான தீர்வு திட்டத்தின் கீழ் கொள்முதல் செய்யப்பட்ட வன்பொருட்களான மேசைக் கணினிகள், மடிக்கணினிகள் மற்றும்

பிரிண்டர்கள் ஆகியவை ஏழு ஆண்டு பழைமையான காரணத்தால், புதிய மேசைக் கணினிகள், மடிக்கணினிகள் மற்றும் பிரிண்டர்கள் ஆகியவை திருவாளர்கள் எல்காட் வாயிலாக கொள்முதல் செய்யப்பட்டு மாநிலம் முழுவதும் 137 இடங்களில் உள்ள அனைத்து வணிகவரித் துறை அலுவலங்களிலும் நிறுவப்பட்டுள்ளன.

**24. வணிகவரி ஆணையர் அலுவலகத்தில் மின் அலுவலக முறையை செயல்படுத்துதல்**

வணிகவரி ஆணையர் அலுவலகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மின் அலுவலக முறையின் பயனாக காகிதமில்லா சூழல், பணியாளர்களின் வசதி மற்றும் மேம்பட்ட செயல்திறன், தரவு பாதுகாப்பு, வெளிப்படைத்தன்மை, பொறுப்புடைமை, நம்பகத்தன்மை ஆகியவை உறுதி செய்யப்பட்டுள்ளன. மின் அலுவலக வாயிலாகவே தபால்களுக்கு எண்கள்

வழங்கப்படுவதால், பகிர்மான பதிவேடு முறை தவிர்க்கப்பட்டுள்ளது, அனைத்து கோப்புகளும் ஒளி வருடல் செய்யப்பட்டு, மின் அலுவலக முறையில் மின்னணு கோப்புகளாக பயன்படுத்தப்படுகின்றன. இத்திட்டம் 'எங்கிருந்தும் பணியாற்றும்' சூழலை பணியாளர்களுக்கு அளித்துள்ளது.

## 25. தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005–இன் கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

வணிகவரித் துறையானது வணிக பெருமக்களுடன் நேரடித் தொடர்பு கொண்டுள்ளது. இத்துறை, தெளிவான, எளிமையான மற்றும் வெளிப்படையான செயல்பாடுகளை உறுதி செய்கிறது. இக்குறிக்கோளைக் கருத்தில் கொண்டு, தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005–இன் கீழ் பெறப்படும் அனைத்து மனுக்களுக்கும் இத்துறை சிறப்பு முக்கியத்துவம் தந்து குறிப்பிட்ட

காலத்திற்குள் தகவல் அளித்து வருகிறது. கடந்த ஆண்டில், அதாவது, 01.01.2021 முதல் 31.12.2021 வரையிலான காலத்தில் இச்சட்டத்தின் கீழ் 569 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, உரிய நேரத்தில் உரிய தகவல்கள் விண்ணப்பதாரர்களுக்கு முறையாக அனுப்பப்பட்டுள்ளன. இச்சட்டத்தின் கீழ் ரூ.6,026/- கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

**26. வணிகவரி அலுவலகங்களுக்கு சொந்த கட்டடம் கட்டுதல்**

2021-2022-ஆம் ஆண்டிற்கான மானிய கோரிக்கையின் போது வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சரால் 06.09.2021 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கிணங்க, வாடகை கட்டடங்களில் இயங்கி வரும் போளூர், துறையூர், ஆத்தூர் (ஊரகம்) மற்றும் ஆத்தூர் (நகரம்), சத்தியமங்கலம், புதுக்கோட்டை மற்றும் கோபிசெட்டிபாளையம் ஆகிய வணிகவரி

அலுவலகங்களுக்கு ரூ.964.85 இலட்சம் மதிப்பீட்டில் சொந்த கட்டடம் கட்டுவதற்கு அரசாணைகள் வெளியிடப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 27. 2021–2022–ஆம் ஆண்டில் வணிகவரித் துறையில் எடுக்கப்பட்ட புதிய முயற்சிகள்

### 27.1. வணிகவரித் துறையின் சீரமைப்பு

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் செயல்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து மாறிவரும் வணிக சூழ்நிலைகளுக்கேற்ப வணிகவரித் துறையும் தனது அமைப்பை மறு ஆக்கம் செய்துகொள்ள வேண்டியுள்ளது. எனவே வணிக சமுதாயத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் அரசுக்கு தேவையான வருவாயைப் பெருக்கவும் ஏதுவாக வெட்டு விளிம்பு நிலையில் அதிக மனித வளத்தை இடம்பெறச் செய்யும் வகையில் வணிகவரித் துறையில் 2021–22–ஆம் ஆண்டில்

மறுசீரமைப்பு பணி தொடங்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

### 27.2. வருவாய் மாவட்டங்களுக்கேற்ப வணிகவரி மாவட்டத்தின் எல்லைகளை திருத்தி அமைத்தல்

ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திற்கும் இணையாக ஒரு வணிகவரி மாவட்டம் இருக்கும் வகையில் துறையின் அலுவலகங்களை மறுசீரமைக்க 2021–2022–ஆம் ஆண்டில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. அதன்படி, 37 வணிகவரி மாவட்டங்கள் வருவாய் மாவட்டங்களுக்கு இணையாக அந்தந்த தலைமையிடங்களில் அமைய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### 27.3. சுற்றும் படைகளின் எண்ணிக்கையை 100–ஆக அதிகரித்தல்

சரக்குகளை ஏற்றிச் செல்லும் வாகனங்களின் போக்குவரத்து கண்காணிக்கப்படுவதை விரிவுபடுத்தவும் உரிய வரி செலுத்தப்படுவதை உறுதி செய்யவும்

2021-2022-ஆம் ஆண்டில் சுற்றும் படைகளின் எண்ணிக்கை 53-லிருந்து 100-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், பட்டியல்களின்றி சரக்கு கொண்டு செல்லும் வாகனங்களை தீவிர சோதனைக்கு உட்படுத்தும் வகையில் இச்சுற்றும் படைகளுக்கு ஆர்.எஃப்.ஐ.டி. பொருத்தப்பட்ட வாகனங்கள் வழங்க உத்தரவிடப்பட்டு இவ்வாகனங்களைக் கொள்முதல் செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

**27.4. ஜிஎஸ்டி-யின் அனைத்து சேவைகளையும் தமிழில் வழங்குதல்**

2021-2022-ஆம் ஆண்டில் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் தலைமையில் அனைத்து மண்டலங்களிலும் நடைபெற்ற வணிகர் மற்றும் வணிகர் சங்கங்களுடனான கலந்தாலோசனைக் கூட்டங்களில் அனைத்து வணிகர் மற்றும் வணிகர் சங்கங்கள் ஒருமனதாக ஜிஎஸ்டி இணையவழி சேவைகள் அனைத்தும் தமிழிலும் வழங்கப்பட வேண்டும் என்று

கோரிக்கை வைத்தனர். இதன் தொடர்ச்சியாக, ஜிஎஸ்டி இணையதள சேவைகளை தமிழிலும் வழங்குமாறு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இணையத்தை (GSTN) தமிழ்நாடு அரசு கடிதம் வாயிலாக கோரியுள்ளது.

**27.5. ஏழு புதிய நிர்வாக கோட்டங்கள் மற்றும் ஆறு புதிய நுண்ணறிவு கோட்டங்கள் உருவாக்குதல்**

துறையின் மறுசீரமைப்பின் ஓர் அங்கமாக, ஏழு புதிய நிர்வாக கோட்டங்களும் புலனாய்வு நடவடிக்கைகளை வலுப்படுத்தும் வகையில் ஆறு புதிய நுண்ணறிவு கோட்டங்களும் உருவாக்க 2021–2022–ஆம் ஆண்டில் ஆணையிடப்பட்டு உரிய மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**27.6. மாநில அளவிலான கட்டுப்பாட்டு அறை மற்றும் புதிய அழைப்பு மையம் அமைத்தல்**

2021–2022–ஆம் ஆண்டில், வணிகவரித் துறையின் சுற்றும் படைகளால் மேற்கொள்ளப்படும் வரி ஏய்ப்பு தடுப்பு நடவடிக்கைகளைக் கண்காணித்து உதவிட

ரூ.1.75 கோடி மதிப்பீட்டில் மாநில அளவிலான மைய கட்டுப்பாட்டு அறை அமைப்பதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

மேலும், அறிக்கைகளைத் தாமதமாக தாக்கல் செய்பவர்களையும் அறிக்கைகள் தாக்கல் செய்யாதவர்களையும் தொலைபேசி மூலம் அழைத்து உரிய காலத்தில் அறிக்கைகளைத் தாக்கல் செய்ய நினைவூட்டுவதற்காக 40 இருக்கைகளுடன் கூடிய அழைப்பு மையம் ஒன்றை ரூ.5.17 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை வாயிலாக அமைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த கட்டுப்பாட்டு அறை மற்றும் அழைப்பு மையத்தை உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**27.7. தமிழ்நாடு மதிப்பு கூட்டு வரிச் சட்டத்தின் கீழ் படிவம் WW தாக்கல் செய்வதற்கான காலக்கெடு நீட்டித்தல்**

வருமான வரி அறிக்கையை தாக்கல் செய்வதற்கான காலக்கெடுவை மத்திய நேரடி வரி வாரியம் நீட்டிப்பு செய்ததைத் தொடர்ந்து

அதற்கேற்றவாறு தமிழ்நாடு மதிப்பு கூட்டு வரிச் சட்டத்தின்படி 2020–2021–ஆம் ஆண்டிற்கு இணையவழி மூலமாக தாக்கல் செய்யப்படவேண்டிய படிவம் WW தாக்கல் செய்வதற்கான காலக்கெடு 31.03.2022 வரை நீட்டித்து தமிழக அரசால் உத்தரவிடப்பட்டுள்ளது.

**28. முடிவுரை**


2021–2022–ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட ஒருங்கிணைந்த முயற்சிகளின் பயனாக வணிகவரித் துறையில் இதுவரையில்லாத சாதனை அளவாக ரூ.1,04,970.06 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. அனைத்து நிலைகளிலும் வெளிப்படைத்தன்மையைப் பின்பற்றி, அரசிற்கு சேரவேண்டிய வருவாயை ஈட்டுவதுடன் வணிகர்களுடன் இணக்கமான சேவைகளை வழங்கும் வகையில் தொடர்ந்து செயலாற்ற இத்துறை உறுதி பூண்டுள்ளது.

**பி.மூர்த்தி**
**வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்**

# வணிகவரித் துறை

## பல்வேறு வரிச் சட்டங்களின் கீழ் 2021-2022ஆம் ஆண்டில் ஈட்டப்பட்ட வருவாய் வசூல் விவரம்

(ரூபாய் கோடியில்)




| வரிவிவரம் | வருவாய் (ரூபாய்கோடியில்) |
|---|---|
| மதிப்பு கூட்டு வரி/ சரக்குகள் மற்றும் சேவைகள் வரி அல்லாத (பெட்ரோல் மற்றும் மதுபானம்) இனங்கள் | 48,401.21 |
| மதிப்பு கூட்டு வரி /வரி நிலுவைகள் | 416.74 |
| மாநில சரக்குகள் மற்றும் சேவைகள் வரி | 29,440.98 |
| ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரி தீர்வு | 16,540.01 |
| ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரி தீர்வு முன்பணம் | 2,935.32 |
| ஜிஎஸ்டி இழப்பீடு | 7,235.80 |
| மொத்தம் | 1,04,970.06 |




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அவர்களை 04.04.2022 அன்று தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் திரு பி.மூர்த்தி அவர்கள் சந்தித்து 2021-2022-ஆம் நிதியாண்டில் வணிகவரித் துறையில் நிர்ணயிக்கப்பட்ட 96,109 கோடி ரூபாயை விட அதிகமாக 8,861 கோடி ரூபாய் வருவாய் ஈட்டியதற்காக வாழ்த்து பெற்றார். உடன் கூடுதல் தலைமைச் செயலாளர்/வணிகவரி ஆணையர் திரு க.பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப., மற்றும் வணிகவரி மற்றும் பதிவுத் துறை செயலாளர் திருமதி பா.ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., ஆகியோர் உள்ளனர்.



09.03.2022 அன்று சென்னையிலுள்ள வணிகவரி மற்றும் பதிவுத் துறையின் ஒருங்கிணைந்த அலுவலக கூட்டரங்கில், மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் திரு பி.மூர்த்தி அவர்கள், வணிகவரித் துறையில் பணியின்போது மறைந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வினில் கூடுதல் தலைமைச் செயலாளர்/வணிகவரி ஆணையர் திரு க.பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப., மற்றும் வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயலாளர் திருமதி பா.ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.



03.01.2022 அன்று சென்னையில், மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் திரு பி.மூர்த்தி அவர்கள் தலைமையில் வணிகவரி இணை ஆணையர்கள் பணிகள் தொடர்பான மாதாந்திர ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூடுதல் தலைமைச் செயலாளர்/வணிகவரி ஆணையர் திரு க.பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப., மற்றும் வணிகவரி மற்றும் பதிவுத் துறை செயலாளர் திருமதி பா.ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை–600 001.